
# சாளரம்

ஒக்டோபர் 1991 | விலை : 12 ரூபா




இளையோர் திங்கள் இதழ்

**உள்ளே.....**

**சாளரம்**

தொடர்பு முகவரிகள்

அலுவலகம்:

**சாளரம்**
வேம்படி வீதி
யாழ்ப்பாணம்.

**அ. முருகேசு**
றோ. க. த. க. பாடசாலை
புதுக்குடியிருப்பு

**அ. கௌரிகாந்தன்**
கிருஷ்ணபுரம்,
கிளிநொச்சி.


- சோவியத் யூனியனில் நடப்பது என்ன?
- மங்கோலியர் மண்ணில் பிறந்த செங்கிஸ்கான் என்ற வீரன்
- அண்டாட்டிக் தொடர்பு - கண்டநகர்வு
- போரும் பாடசாலையும்
- விசர்நாய்க்கடி
- நீர்வளம் காப்போம்
- சிறுகதை
- உருவகக்கதை
- ஆண் : பெண் = 100 : 100 சாத்தியமா?
- தமிழன் ஒரு இன - மொழி வழக்குழுமம்
- கல்விக்கதிர்
- நிலாமுற்றம்
- டென்னிஸ்
- வெல்லப்பட முடியாதவன்
- ஆசிரியத் தலையங்கம்
- நுண்ணறிவுப் போட்டி 2ற்கான பதில்கள்
- நுண்ணறிவுப் போட்டி – 3
- அரும்புகள் - தெறிப்பு

# சோவியத்யூனியனில் நடப்பது என்ன?

சோவியத் யூனியன் முதலாளித்துவப் பாதைக்கு மாறுவதை சோஷலிசத்தை நேசிக்கும் எந்த ஒருவராலும் விரும்பமுடியாது. சோஷலிச அரசியல் பொருளாதார அமைப்பை வளர்த்துச் செல்வதில் ஏற்பட்டிருந்த தவறுகள் மாபெரும் சோஷலிசப் புரட்சியை இன்று எதிரியின் பக்கம் கொண்டுபோய் வீழ்த்தியுள்ளது.

கைத்தொழில் வளர்ச்சியில்லாமல், கைத்தொழில் வளர்ச்சிக்கான சரியான திட்டமிடல் இல்லாமல் சோஷலிச புரட்சியை வெற்றிகரமாக்க முடியாதென லியோன் ரொஸ்கி அடிக்கடி கூறிவந்தார். கைத்தொழில் வளர்ச்சிக்கும்,

தின் எதிரிகள் சோஷலிச அமைப்பையே அங்கு சரித்துள்ளார்கள். உண்மையில் சீர்திருத்தம் தேவைப்பட்டதுதான். ஆனால் அது எல்லாவற்றையும் அமெரிக்காவுக்கு விட்டுக்கொடுக்கப் பண்ணிவிட்டது.

தேசிய இனப்பிரச்சினை சோவியத் யூனியனில் திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை என்பது துக்ககரமானதுதான். அவ்வாறு இனப்பிரச்சினை திருப்திகரமாகத் தீர்க்கப்படாததாற்தான் அந்த இனங்கள் தமக்கு அரசியல் விடுதலை கோருவதும் அதனை மேற்குலகம் பயன் படுத்துவதும் சாத்தியமாகியுள்ளது. ஒரு சோஷலிச அரசு கட்டுக்குலைந்து போவதும்,

## இது உலக சோஷலிசத்தின் இறுதி வீழ்ச்சி அல்ல

தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் உகந்த வகையில் மனிதனின் ஆக்கத்திறனை வளர்க்கக்கூடிய விதமாக அரசியற் கட்டுமானத்தை அமைக்காமல் பதவிவழி அதிகாரத்தை நிலை நாட்டுவதற்குரிய ரீதியில் ஸ்ராலின் அரசியல் அமைப்புக்களை உருவாக்கினார். இதன் விளைவாக உளவுப்படையில் தங்கி நின்று கம்யூனிஸ்ட் கட்சியை வலது குறைந்த ஓர் அங்கமாக்கினார்.

இறுதியில், மேற்குடன் ஒப்பிடுகையில், சோவியத்தின் பொருளாதாரமும், தொழில்நுட்பமும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளுண்டது. இதனாற்தான் மறுசீரமைப்பு ஒன்று சோவியத்திற்கு அவசியப்பட்டது. ஆனால் இவ் அவசியத்தைப் பயன்படுத்தி சோஷலிசத்

முதலாளித்துவ அரசுகளின் கரங்கள் உலக அரங்கில் ஓங்குவதும் வேதனை அளிக்கக்கூடிய ஒன்றே. இதனை ஒரு முழுத் தோல்வியாக எண்ணிச்சோர்வடையாது, ஒரு படிப்பினையாகக் கொண்டு எதிர்கால சோஷலிச அரசமைப்புகளை உருவாக்கலாம் எனத் துணியலாம்.

கொர்பச்சேவ் மறுசீரமைப்புத் திட்டத்தைக் கொண்டுவந்தார். இதனைப் பயன்படுத்தி ஒருபுறம் யெல்ற்சின் தலைமையில் வலது சாரிகள் எழுச்சியடைந்தனர். மக்களுக்கும் பிரச்சினைகள் பல இருந்ததால் இவர்களின் கோஷங்களுக்குப் பின்னால் எடுபட்டனர். கம்யூனிஸ்ட் கட்சியின் எழுந்தமானமான போக்குகளால் காலத்துக்குக் காலம் மக்கள் மத்தியில் அதிருப்திகளும் வளர்ச்சியடைந்து வந்தது. இத்தகைய சூழலிற்தான் ரஷ்யக் குடியரசுக்கான நேரடி ஜனாதிபதி தர்தலில் வலதுசாரியான யெல்ற்சின் பெருவெற்றியீட்



திரு. கொர்பச்சேவ்

டினார். இவ்வெற்றியானது முழு சோவியத் யூனியனிலும் உலக அரங்கிலுமே கம்யூனிஸ்ட் கட்சியை அங்கீகாரமற்ற நிலைக்குத் தள்ளியது

இத்தகைய வளர்ச்சிப் போக்கின் பின்னணியில் கம்யூனிஸ்ட் கட்சிவுள்ள தீவிர இடதுசாரிகள் கொர்பச்சேவை எதிர்த்தனர். நிதானமான இடதுசாரிகளின் மனங்களிற் கூட நம்பிக்கையின்மை தோன்றியது இதனால் ஒருபுறம் தீவிர

சாரணன்

வலது சாரிகளினதும், மறுபுறம் தீவிர இடதுசாரிகளினதும் எதிர்ப்பிற்கு கொர்பச்சேவ் ஆளானார். இவ்வாறான சூழலில் மேலும் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த மேற்குலகம் முனைந்தது. இத்தகைய குழப்பம் நிறைந்த சூழலிற்தான் கொர்பச்சேவிற்கெதிரான சதிப் புரட்சி வெற்றியளித்தது.

(...6ஆம் பக்கம் பார்க்க)

வரலாறு

# மங்கோலியர் மண்ணில் பிறந்த செங்கிஸ்கான் என்ற வீரன்

மங்கோலியாவில் வாழ்ந்த மங்கோலியர்கள் ஆரம்பத்தில் எதுவிதத்திலும் பிரபல்யப்படாத ஒருசாதாரண கூட்டங்களைச் சேர்ந்தவராகவே காணப்பட்டனர். இவர்கள் வட சீனாவை ஆண்ட கினியதாத்தாரியருக்கு அடங்கி வாழ்ந்து வந்தனர். ஆனால் அடிமை நிலையில் வெட்டை வெளிகளில் ஒரு வித்தியாசமான வாழ்வை மேற் கொண்டிருந்த இந்த இனத்தின் வளர்ச்சியென்பது ஒரு காலகட்டத்தின் பின்னர் மிகவும் வேகமாக வளரத் தொடங்கியது. இந்த வளர்ச்சிக் கட்டத்தின் ஆரம்பத்திலேயே ஆங்காங்கே பரவிக்கிடந்த மங்கோலியர் ஒன்றுசேரத் தொடங்கியிருந்தனர். இவர்களை வழிநடத்த ஒரு தலைவன் தேவைப்பட்டான். இதனால் மங்கோலியர் ஒரு அசாதாரண திறமை படைத்த செங்கிஸ்கான் என்ற அதிசயமான வீரனை ஏகோபித்த தலைவனாக ஏற்றுக் கொண்டனர்.

மங்கோலியர் எதற்கும் பயப்படுவது கிடையாது. அவர்கள் இயற்கையின் பெரும்பாலான அசாதாரணங்களையெல்லாம் அனுபவத்தின் பின் தமக்கு இசைபு பட்டதாக ஆக்கிக் கொண்டவர்கள். மங்கோலியர் பெருமைகளை தனித்து நின்று கட்டிக்காத்த செங்கிஸ்கான் முதலில் பீக்கிங் நகரின் மீது படையெடுத்தான். படையெடுத்ததுதான் உடனடியாக கினிய சாம்ராட்சியம் கலைந்து விட்டது. செங்கிஸ்கானின் பழைய பெயர் திமுசின் என்பதாகும். இவன் கி. பி 1155-ம் ஆண்டில் பிறந்தான். சிறிய வயதாக செங்கிஸ்கான் இருக்கும் போதே தகப்பனாரான யெசுகை பகதூர் இறந்துவிட்டார்.

செங்கிஸ்கான் சிறுவயதிலிருந்தே மிகவும் முயற்சி செய்து முன்னேறத் தொடங்கியிருந்தான். பிற்பட்ட காலத்தில் செங்கிஸ்கானின மங்கோலிய மகாசபை சக்கரவர்த்தியாகத் தேர்ந்தெடுத்தது. இதற்கு முன்பே செங்கிஸ் என்ற பட்டத்தை அவன் பெற்றிருந்தான். செங்கிஸ்கான் சிறுவயதிலிருந்து முயற்சி செய்து முன்னேறியிருந்தாலும் ஐம்பத்தொராவது வயதின் பின்பே வெற்றி வீரனாக திகழத் தொடங்கியிருந்தான்.

பெரும்பாலான உலக வரலாற்று வீரர்கள் தமது இளமைக் காலத்துடிப்பிலேயே பலவற்றைச் சாதித்திருந்தார்கள். ஏன் அவர்கள் இளமையிலேயே இறந்தும் விடுவதுண்டு. ஆனால் செங்கிஸ்கான் இரத்தத் துடிப்பு என்பதைவிட சிந்தனைஓட்டம் அதிகரித்த வயதில்தான் பல செயற்பாடுகளைச் சாதிக்கத் தொடங்குகிறான். செங்கிஸ்கானின் செயற்பாடுகளில் தெளிவும், உறுதியும் இருக்கும். அவன் சிந்தனைக்கேமுதலிடம் கொடுத்தான், எதற்கும் அவசரப்பட்டது கிடையாது. திட்டமிடாமல் எதனையும்செய்யத்தொடங்க மாட்டான். யுத்த நிபுணத்துவத்தில் செங்கிஸ்கான் நிகரற்றவன். செங்கிஸ்கான் ஒரு சேனைத் தலைவனாக இருந்தது தனது தளபதிகளிற்கு நேரடிப் பயிற்சி கொடுத்து சேனைப்பிரிவுகளை மிகவும் உயர்வுக்கு இட்டுச் சென்றான்.

செங்கிஸ்கானின் யுத்த நிபுணத்துவமே மங்கோலிய மக்களின் வெற்றிக்குக் காரணம். தான் பிறந்த மண்ணைவிட்டு வேற்றான் மண்ணில் நின்று போரிட்டு வெற்றி பெறுவதென்பது சுலபமான காரியமா என்ன? அவன் சீனாவின் மேல் படையெடுத்து கினிய சாம்ராட்சியத்தை முடிவுக்குக் கொண்டு வந்தான். பின்னர் கொரியாவையும் வென்றான். இவ்வாறு ஆசியாவில் ஒரு வரலாற்றைச் சாதித்த செங்கிஸ்கானுக்கு ஐரோப்பாமேல் படையெடுக்க வேண்டுமென்ற விருப்பம் அவ்வளவாக இருக்கவில்லை. ஆனால் ஒரு சம்பவம் அவனை ஐரோப்பா மேல் படையெடுக்க வைக்கின்றது.

கொராசம் அரசனான ஷாவுடன் செங்கிஸ்கான் ஒரு சம்பவத்தில் முரண்பட்டதே ஐரோப்பா மேல் படையெடுப்பதற்குக் காரணமாகும். ஷா ஆண்ட நாட்டின் கவர்ணர் ஒருவர் மங்கோலிய வியாபாரிகள் சிலரைக் கொன்றுவிட்டான். இது செங்கிஸ்கானின் காதுகளிற்கு எட்டியதும் ஒரு தூதுவனை ஷாவிடம் அனுப்பி கவர்ணரைத் தண்டிக்கும்படி கேட்டுக்கொண்டான். ஆனால் செங்கிஸ்கான் அனுப்பிய தூதுவரை ஷா கொன்றுவிட்டான். செங்கிஸ்கான் வேறுவழியின்றி மேற்கே அந்த நாட்டை ஆக்கிரமிக்க படையணியுடன் கி.பி. 1219 ல் செல்கின்றான். அங்கே செங்கிஸ்கானின் படையணியின் அகோரத் தாக்குதலால் கொராசம் சாம்ராட்சியம் இருந்த இடம் தெரியாது அழிக்கப்பட்டது. அனைவரும் புறமுதுகிட்டோடினார்கள். அதனால் செங்கிஸ்கான் துரத்திப் போர் செய்ய விரும்பாமல் அங்கிருந்து ரஷ்யாவிற்குச் சென்று கீவ் கோமகனைச் சிறைப்படுத்தினான்.

கிழக்கே பசுபிக் சமுத்திரத்திலிருந்து மேற்கே கருங்கடல்வரை பரவியிருந்த மங்கோலிய சாம்ராட்சியம் அவன் இல்லாத காலத்திலும் வீழ்ச்சியுறாமல் இருந்ததென்றால் அது கூட செங்கிஸ்கானின் திட்டமிடலும், வீரமும்தான் காரணமென்று கூறலாம். செங்கிஸ்கான் அனைத்திலும் ஒரு வித்தியாசமான போக்குடையவன்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அண்டாட்டிக் தொடர்பு - கண்டநகர்வு

## 570 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தென்கண்டப் பெரும் பாகங்களும், வட அமெரிக்காவும் அயலயலாக இருந்திருக்கின்றன

மில்லியன் தொன் எடையுள்ள பனிக்கட்டிகளால் புதையுண்டும், தனது அயல் பிரதேசங்களிலிருந்து மிகத் தொலை தூரத்தில் இருப்பதாகவும் கருதப்பட்டு வந்த ஆண்டாட்டிக்கா, புதிய நாடுகளின் கண்டுபிடிப்பாளரான கம்டன் ஜேம்ஸ்குக்கின் வார்த்தைகளில் 'சூரியனுடைய வெப்பக் கதிர்கள் உணரப்படாத, இயற்கையால் அழிந்த கண்டமென' வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பிற்காலங்களில் கூட நிலவாய்வாளர்கள் இக்கண்டத்தின் ஆய்வில் அதிக அக்கறை செலுத்தாதவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள்.

ஆனால்,

இவ்வாண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் இரு அமெரிக்கப் புவி வரலாற்றாய்வாளர்களினால் வெளியிடப்பட்ட கருத்துக்கள், நிலவாய்வாளர்களை ஆச்சரியத்திலாழ்த்தியுள்ளன. இவர்கள் கருதுவதாவது:—

அண்டாட்டிக்கா எல்லாக்காலங்களிலும் அயல்ப் பிரதேசங்களிலிருந்து தொலை தூரத்தில் இருந்து வந்ததில்லை. உண்மையில் கூறப்போனால் 570 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் இன்றைய தென்முனைவானது இன்றைய வட அமெரிக்காவின் அண்மையிலுள்ள லாஸ்வெகாஸ் பகுதியிலிருந்து 1500 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்திருக்கிறது.

இக் கொள்கை சான்பிரான்சிஸ்கோவிலுள்ள அமெரிக்க புவிவரலாற்றுச் சங்கக் கூட்டத்தில் வெளியிடப்பட்டபோது நம்பத்தகுந்த பல கருத்துக்கள் கண்ட நகர்வுகள் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்தன. புவி வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட நெருக்கடி காலங்களில் கண்ட நகர்வுகள் எங்கே, எப்போதுதோன்றினஎன்பதற்கும், மேலுயர்ச்சிக்கு ஆளான கடற்பாகங்களில் உயிரினங்களின் தோற்றம் பற்றியும் பல விளக்கங்கள் கிடைத்துள்ளன. பசுபிக் சமுத்திரத்தின் பிறப்புப் பற்றியும், விலைமதிப்புள்ள கனிப்பொருட்களின் படிவுகள் பற்றியும் பல்வேறு விளக்கங்களை தந்துள்ளதுபற்றி தங்கள் கருத்தைத் தெரிவித்த இரட்டையர்களில் ஒருவரான டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அயன் டால்சியல் 'இந்தக் கொள்கை கடந்த 570 மில்லியன் வருடங்களுக்கான ஒரு புதிய பாதையைத் திறந்து வைத்துள்ளது' என்கிறார்.

250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் கண்டங்கள் யாவும் ஒன்றாக ஒரு கொத்துப்போல் இணைந்து மிகப் பிரமாண்டமான ஒரு கண்டமாக இருந்ததெனவும், அதனைச் சூழ்ந்து கடல் (நீரானது) காணப்பட்டதெனவுமே புவிவரலாற்றாசிரியர்கள் இதுவரைகருதிவந்துள்ளனர். இந்தக்கண்டத்தையே பஞ்சியா என்று வழங்கினர். இக்கொள்கைக்கும்தேவையான,நம்பிக்கையானசான்றாதாரங்களாக, பாறைகளின் புவிரசாயன தன்மைகளை, மலைகளின் எல்லைகளைக் கொண்டிருந்தனர் எனினும் பஞ்சியா தான் முதல் காணப்பட்ட முதன்மையான பெரிய கண்டமல்ல, இதற்கு முன்னரும் இத்தகைய ஒரு கண்டம் இருந்திருக்க வேண்டும். ஆயினும் அந்தக் கண்டம் மிக முக்கியமான உண்மைகளை உள்ளடக்கியதாகவும் மர்மமானதாகவும் விளங்குகிறது.

இந்த மர்மத்தை விளக்கும் நம்பிக்கையான சான்றாதாரங்களை டால்சியலினதும், அவர் தம் சகபாடியான எல்றிட்ஜ் மூஸ் (இவர் கலிபோயை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்) ஆகியோரின் கொள்கை என்னும் புதிய திறவுகோல் வழங்குகினறது.

அண்டாட்டிக்காவின் வெடல் கடற்கரையோரத்தில் காணப்படும் பாறையுரு அமைவுகளை ஒத்ததன்மைகளை கனடாவின் கிழக்குக் கரையோரமாகவுள்ள கிரன்விலலி வலையத்திலும் காணமுடிகிறது. புவிவரலாற்றியல் தொடர்பான பாறைகளின காந்தப்புலத்தன்மை, அண்டாட்டிக், அவுஸ்திரேலியா, வடஅமெரிக்காவின் மேற்குக்கரைகளில் காணப்படுகின்றன. இப்பாறைகள் கேம்பிறியன் காலத்துக்கு முற்பட்ட காலத்தவை (கேம்பிறியன் காலம் ஒரு மில்லியன் — 570 மில்லியன் ஆண்டுவரையானது) இவைதான் உண்மையான பஞ்சியாவுக்குமுன்னைய கண்டத்தின் எச்சங்கள் என்கிறார்.

புதிய புவியியலானது, புவிவரலாற்று மர்மங்களின் மீது இன்று புதிய ஒளிபாய்ச்சி நிற்கின்றன. ஆய்வாளர்கள் இன்று பசிபிக் சமுத்திரத்தின் தோற்றம் பற்றிய கொள்கையை ஏற்றுக்கொள்வதில்லை. சிலர் 'பசிபிக் சமுத்திரமானது வட அமெரிககாவிலிருந்து சைபீரியா, பிரிந்ததனால் ஏற்பட்டது' எனவும், வேறுசிலர் 'புவியிலிருந்து சந்திரன் பிரிந்து சென்றதால் புவியியல் தோன்றிய சிதைந்த பள்ளமே பசிபிக் சமுத்திரமானது' எனவும் கருதுகினறனர். ஆனால்,

இந்த இரட்டையர்களால் முன்வைக்கப்பட்ட புதிய கருத்தானது '570 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வட அமெரிக்காவிலிருந்து அண்டாட்டிக்காவும், அவுஸ்திரேலியாவும் பிரிந்து சென்றதனால் பசிபிக் சமுத்திரம் உருவாக்கம் பெற்றது' என்பதாகும்.

அறிவியல்

இந்தக்கால ஆராய்ச்சி நிலப்பாகங்களில் அக் காலத்தில் தோன்றி உயிரினங்களை விளக்கவும் உறு துணையாகவுள்ளது.

இந்த அதிமுக்கிய கண்டம் (Super Continent) உடைவுற்றுப் பிரிந்தகாலை மாபெரும் பிரளயம் ஒன்று உருவாகியிருக்கவேண்டும். இதனால் கண்டங்களில் வெள்ளப்பெருக்குத் தோன்றி, ஆழமற்ற கடற்கரை யோரங்களும் உருவாகின. இக்கடற்கரையோரங்களில் ஆழ்கடலில் வாழ்ந்துவந்த உயிரினங்கள் மேலெழுந்த இக்கரைகளிலே உயிர்வாழத் தம்மை மாற்றிக் கொண்டன.

சில புவிவரலாற்றியலாளர்கள்-போல் ஹொட்மன் உட்பட (இவர் கனடிய புவிவரலாற்று அளவீட்டுத் துறையில், ஓர் ஆராய்ச்சி விஞ்ஞானி) இந்தப் புதிய பாதையானது (Newmap) மிகவும் விலைமதிப்புள்ள கனிப்பொருட்களைக் கண்டுபிடிக்கத் துணைபுரியும் எனக் கருதுகின்றனர்.

இந்தப் புதிய கொள்கை உண்மையாக விளங்கு மாயின் கிழக்கு அவுஸ்திரேலியாவில் காணப்படுகின்ற கனிப்பொருட்களான வெள்ளி, செம்பு, நாகம் என் பன வடமேற்கு கனடாவிலும் காணப்படும் என நம்பலாம். ஆயினும் விஞ்ஞானிகள் இந்த உண்மையை சரியாக ஊர்ஜிதம் செய்ய - மேற்கு ஐக்கிய அமெரிக் காவின் பாறைகளும் கிழக்கு அண்டாட்டிக்கா பாறை களும் நெருங்கிய தொடர்பு கொண்டனவா என்பது பற்றி - பல ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகளை வெளியிடுவதில் மிகக் கவனம் கொண்டுள்ளனர்.

ஆயினும், 'ஆறுமாதகால இடைவெளிக்குள் இவ் வாய்வுகள் பூர்த்தியாகி, அரைக்கோடி ஆண்டுகளின் மர்மம் வெளியாகிவிடும்' என டால்சியல் அறுதியிட் டுக் கூறுகிறார்.

ரைம் (Time) - (ஏப்ரல் 1991)
மொழிபெயர்ப்பு
செம்பியன்

## மங்கோலியர்...

...2ஆம் பக்கத் தொடர்ச்சி

அவன் மத வெறி காட்டியது கிடையாது. கடவுளை வணங்க வேண்டுமென்றால் அவன் வானத்தைப் பார்த்தே வணங்குவான். செங்கிஸ்கான் மதத்து வேஷம் அற்றவனாக இருந்தாலும் இறக்கும் வரை தனது மதத்தையே பின்பற்றியிருந்தான். இறக்கும். வரை உறுதியுடன் இருந்தான்.

செங்கிஸ்கான் எழுத்து வாசனையற்ற, படிப்பு வாசனையற்ற ஒருவன். செய்திகள் அனைத்தும் வாய் மூலமாகவே அனுப்பப்பட்டு வந்தது. அந்த நேரத்தில் எழுத்தின் தோற்றத்தை அறிந்த செங்கிஸ்கான் அதைக் கற்றுணரும்படி தளபதிகளிற்கும், அதிகாரிக ளிற்கும் பணித்தான். இவ்வாறு செங்கிஸ்கான் எப் போதும் புதுமைக்கு முதலிடம் கொடுத்தான். ஆனா லும் அவனிடம் பல பழைய சிந்தனைகளும் இருக்கத் தான் செய்தது. செங்கிஸ்கான் எதைப்பின்பற்றினா லும் வெற்றி அவனுக்கே கிடைத்தது.

செங்கிஸ்கான் கி.பி. 1227ம் ஆண்டு மரணத்தைத் தழுவிக் கொள்கின்றான். இறக்கும்போது செங்கிஸ்கா னுக்கு 72வயதாகும். மங்கோலியர் நாடோடிகள் என்ற பெயரை மாற்றி அவர்களிற்கென்றொரு சாம்ராட் சியத்தை அமைத்துச் சென்றவன் செங்கிஸ்கான். அவன் தான் பிறந்த மண்ணிற்கும், மக்களிற்கும் ஒரு பெரும் உதவியைச் செய்து விட்டு இறந்தான். செங்கிஸ் கான் இறந்த பின்னர் அவன் மகன் ஒகதாய் மகாகான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். இவன் செங்கிஸ்கானின் பேராற்றலுக்கு நிகரானவன் அல்ல. ஆனாலும் சமாதான வழியை அதிகமாக விரும்பியிருந்தான். நீண்ட நாள் வரிசையில் செங்கிஸ்கான் மங்கோலிய மண்ணிற்கும், மக்களிற்கும் நல்ல தலைவன் என்பதில் யாதொரு குறையுமில்லை.

யோ ஜெயகாந்தன்
—அரசறிவியல் மாணவன்—
முகமாலை, எழுதுமட்டுவாழ்.

உசாத்துணை
"உலக வரலாறு.,
—நேரு.

### சுயெஸ் கால்வாய்.

மத்திய தரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் சுயெஸ் கால்வாயை இயந் திரங்களின் மூலம் 25.04.1859 அன்று வெட்ட ஆரம்பித்து 1869-ம் ஆண்டு முற்பகு தியில் முடிவுற்றது. இந்த ஆண்டு முதலேயே கால்வாய் மூலம் கப்பல் போக்குவரத்து தொடங்கியது.

## போரியல் கல்வி அத்தியாயம் – 2

# போரும் பாடசாலையும்

ஆளுவோர், ஆளப்படுவோர் எனச் சமூகம் இருகூறாக பிளவுபட்டதன் பின்னர் சமூகத்தின் அனைத்து விவகாரங்களிலும் ஆளுவோரின் நலன் பின்னிப்பிணைக்கப்படுகின்றன. தற்போதைய எமது கல்வித்திட்டமும் இதற்கு விதிவிலக்கானதல்ல. காலனியல் ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இன்றைய கல்வியமைப்பு இன்று நவ-காலனியல் ஆட்சிக்கு சேவை செய்வதாக மாற்றப்பட்டுள்ளது.

எமது பாரம்பரிய கல்வியமைப்பு போரியலை பிரதான பாடத்திட்டமாக கொண்டிருந்தது. 16 ம் நூற்றாண்டின் பின்னர்தான் போரியல் கல்வி எமது பாடத்திட்டத்தில் இருந்து படிப்படியாக முற்றாக அப்புறப்படுத்தப்படுகிறது.

கி. பி முதல் மூன்று நூற்றாண்டுகளே சங்ககாலம் என அழைக்கப்படுகிறது. இக்காலத்தில் இலக்கியம் அகத்திணை, புறத்திணை என இருபகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. இவ் இருதிணை நூல்களுமே அன்று கற்கைக்குரிய நூல்களாகவும் இருந்தன. அறம், பொருள் ஆகியவற்றைப் பற்றிய நூல்களே புறத்திணை எனப்பட்டன. இப் புறத்திணை நூல்கள் மூவகைப்படும். ஒன்று பாட்டாண்டிணை, இரண்டு காஞ்சித்திணை, மூன்று போர் ஒழுக்கம். பாட்டாண்டிணை என்பது மன்னர்களையும் அவர்கள் சார்ந்த பொருட்களையும் பற்றிப் போற்றிப் பாடலாகும். காஞ்சித்திணை என்பது போரின் போதான தன் அர்ப்பணம் பற்றியதாகும். இத் தன் அர்ப்பணம் ஆண்பாற் காஞ்சி பெண்பாற்காஞ்சி எனப்படும்.

சங்ககாலம் குலங்களும், குழமங்களும் தமக்குள் போர்புரிந்திட்ட காலமாகும். ஆகவே ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக் கொண்டார்கள். போர்க்கலையில் வல்லவர்களாக இருந்தார்கள். போரியல் கல்வி அக்கால கல்விமான்களின் ஒரு அத்தியாவசியமாய் இருந்தது போலும்.

அதைத் தொடர்ந்து வந்த சங்கமருவிய காலம் போரியலைப் புறக்கணிக்கவில்லை. இக்கால நூல்களும் ஒன்றான பதினெண்கீழ் கணக்கில் ஒரு நூல் போர்க்களம் பற்றியதாகும். ஏனைய 11 அறநூல்கள் போரியலை உள்ளடக்கியதாகவே இருந்தன. இதில் தலையாய அறநூலான திருக்குறள் அரசறவியலுக்கும், போரியலுக்கும் மிகுந்த அழுத்தம் கொடுத்துள்ளது.

அக்கால கல்வி நிறுவனங்களான சங்கம், கோவில்கள் போன்றவைகளில் இவை கணக்கில் கொள்ளப்பட்ட பிரதான நூல்களாக இருந்தன.

இவை மட்டுமா? அதற்குப் பிந்திய காலத்தில் கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்கள் கோவிற் பள்ளிக் கூடங்களில் பிரதான இடத்தைப்பிடித்தன. பகவத்கீதை புறத்திணை நூல்களுள் அடக்கப்பட வேண்டிய தொன்றாகும். அது அறம்பற்றியும் போர் பற்றியும் கூறுகின்றது. கம்பராமாயணத்தில் ராமர் கூட அறத்துக்கும் போருக்குமான ஒரு குறியீடாகவே காட்டப்படுகிறார். மகாபாரதப் போருக்கு மூலமாய் இருந்த கிருஷ்ணனும் கம்பராமாயணத்தில் பல போர்களை நடத்திய இராமனும் அவதாரங்களாகவே சித்தரிக்கப்படுகிறார்கள். இவ் இரு நூல்களும் போரியல் பற்றி நிறைய விடயங்களைக் கொண்டதாக உள்ளது.

தமிழர்களின் மரபுவழிச் சடங்குகளில் ஒன்றாகவிருக்கும் சரஸ்வதி பூசையைக் கூட கவனியுங்கள். வீரம், செல்வம், கல்வி மூன்றுக்கும் அங்கு சமமுக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இறுதிநாள் கருவிகளுக்கான பூசை நடைபெறும் போது செல்வத்துக்கான கருவிகளான உற்பத்தி கருவிகளும், கல்விக்கான கருவியான நூலும் எழுது கோலும், போருக்கான கருவிகளும் (ஆயுதங்களும்) ஒன்றாக வைத்து பூசைசெய்யப்படுகின்றன இங்கு பெண்தெய்வங்களே முதன்மை பெற்றிருப்பதால் இவ்வழிபாட்டு முறை சங்ககாலத்துக்கும் மிக முற்பட்ட தாய்வழி சமூக அமைப்பில், கொற்றவை வழிபாட்டுக் காலத்தில் தோன்றியதாக இருக்கலாம்.

**மாதுங்கன்**

போரியல் கல்வியும், போர்க்கலையும் எல்லோர்க்கும் பொதுவாக இருந்த ஒரு காலம் மறைந்து, போரியல் கல்வியும், போர்க்கலையும் சைத்திரியர்களுக்கும் பிராமணர்களுக்கும் மாத்திரமே சொந்தமானது என்றோர் நிலை தோற்றம் பெற்றது, பெரும்பான்மையான மக்கள் அதைக் கற்பதில் இருந்து விலக்கப்பட்டார்கள். அவசியம் ஏற்பட்ட இடங்களில் ஏனையோருக்கு போர்ப்பயிற்சி மாத்திரம் கொடுக்கப்பட்டது; ஆனால் போரியல் கல்வி மறைக்கப்பட்டது.

ஐரோப்பியர்கள் வந்தார்கள். இலங்கை இந்தியா ஆகிய பகுதிகளைத் தமது காலனியாக்கினார்கள், பாரம்பரிய நிறுவனங்கள், சமூக விழுமியங்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டன.

புதிய கல்வியமைப்பும் புதிய சமூக விழுமியங்களும் உருவாக்கப்பட்டன. போரியல் சம்பந்தமான எந்த விடயமும் முற்றாகவே நிராகரிக்கப்பட்டு, ஒதுக்கித் தள்ளப்பட்டன. காலனியல் அரசாங்கத்தின் சேவகர்களாக பணியாற்றுவதுதான் கல்வியின் உயர் குறிக்கோள்

என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் மக்கள் சாதாரண போர்வீரர்களாக காலனியல் இராணுவத்தில் இணைக்கப்பட்டார்கள் இவர்கள் சமூக அந்தஸ்து இல்லாதவர்களாகவே ஆக்கப்பட்டார்கள். தமிழீழத்தில் இந்நிலமை மிகப்பரவலாகவும் ஆழமாகவும் நிலவியது. இராணுவத்திலோ, பொலிசிலோ சேருவது என்பது ஒரு தரங்குறைந்த செயலாக கருதப்பட்டது. காலனியில் கல்வி அமைப்பு போர்த் தொழிலையே ஒரு இழிவான தொழிலாகக் கருதும் நிலையைத் தோறறுவித்ததே இதற்கான காரணமாகும்.

இலங்கைத் தீவு 'சுதந்திரம்' பெற்ற ஆரம்பநாட்களில் — 1940 கள், 1950 களில் — முப்படை என்பது ஒரு அலங்காரப் பொருளாகவே இருந்தது. இவர்கள் அரசாங்க வைபவங்களை அழகு படுத்தும் கொலுப்பொம்மைகளாகவே இருந்தார்கள். சுடுகலங்கள் வைத்திருந்தார்கள். ஆனால் போர்பற்றி எந்த அறிவும் இவர்களிடம் இருக்கவில்லை. சமூக அந்தஸ்தும், வருமானமும் குறைந்த தொழிலாகவே இது இருந்தது. இக் காலப் பகுதியில் பொலிஸ் சேவை கூட்டங்களை அடக்குதலும், கிறிமினல் குற்றவாளிகளைப் பிடிப்பதுமாகவே இருந்தது. இவர்களிடம் துணிவும், மிகச் சிலரிடம் சுடுகலப் பயிற்சியும் எதிர்பார்க்கப்பட்டது. இவர்களுக்கு போரியலோ, போர்க்கலையோ அவசியமானதாக இருக்கவில்லை. கலகங்கள், கலவரங்கள் ஆகியவற்றை அடக்கும் பயிற்சியே இவர்களுக்கு அதிகமாக வழங்கப்பட்டது.

இக் காரணங்களினால் சுதந்திரமடைந்த பின்பும் சுமார் 20 வருடங்கள் எமது கல்வி அமைப்பு போரியலை ஒரு பாடத்திட்டமாகக் கொண்டிருக்கவில்லை.

அதன் பின் நிலமை மாற்றமடைந்தது. இலங்கைத் தீவினுள் உள்நாட்டு போர் மேகங்கள் கருக்கொள்ளத் துவங்கின சிங்களவரிடையே இளைஞர்கள் அரசாங்கத்துக்கு எதிராக படைக்கலம் தூக்க ஆரம்பித்தார்கள். 1971 ல் இது பெரும் அலையாக வெளிப்படையானது அதே வேளையில் தமிழர்கள் தமது சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

இப்போது தான் போரியல் கல்வியின் அவசியத்தை சிறிலங்கா அரசாங்கம் புரிந்து கொள்ள ஆரம்பித்தது. காலனியல் வாதிகளால் சிறிலங்கா கல்வித் திட்டத்தில் இருந்து முற்றாக புறக்கணிக்கப்பட்ட போரியல் கல்வியை அது தனது கல்வித்திட்டத்தில் சேர்த்துக்கொள் முயற்சித்ததா? இல்லை. அது நடைபெறவில்லை.

சிறிலங்கா அரசு தான் போரியல் கல்வியை கற்க விரும்பிய அதே வேளை தன்னைத்தவிர வேறு எவரும் அதைக்கற்கக் கூடாது. என்றும் விரும்பியது குறிப்பாக மாணவர்கள் எவருமே போரியல் கற்கக்கூடாதுஎனபதில் உறுதியாய் இருந்து வருகிறது. சிங்களவரிடையேயும், தமிழரிடையேயும் அரசுக்கு எதிராக படைக்கலம் ஏந்துவதில் மாணவர்களின் பங்களிப்புள்ளதை அரசு நன்றாகவே புரிந்து கொண்டுள்ளது.

தேசிய ஒடுக்குமுறையும், தேசிய சுரண்டலும் இருக்கும் வரையும் போரியல் கல்வி ஒரு பாடத்திட்டமாக இருந்தே ஆகவேண்டும்.

அடுத்த இதழில் "போரும் அரசியலும்"

## சோவியத்...

(1ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையில் கொர்பச்சேவின் வீழ்ச்சி சோவியத்திலுள்ள தீவிர வலதுசாரிகளுக்குப் பெரும்பாதிப்பைக் கொண்டு வந்துவிடும் என்பதாலும், மேலைத்தேயத் திட்டங்கள் தோல்வியடைந்துவிடும் என்பதாலும் வலதுசாரிகளும், மேலைத்தேய சக்திகளும் இணைந்து கொர்பச்சேவை மீண்டும் பதவிக்குக் கொண்டுவருவதில் வெற்றியடைந்தனர். மடை திறந்த வெள்ளம் போல உருவான மறுசீரமைப்பு பின்னோக்கிச் செல்லமுடியாது போனது இதனாற் சதிப்புரட்சி இருதினங்களில் தோல்வியடைந்ததும் சீர்திருத்தம் மேலும் உத்வேகமடைந்தது. இறுதியில மறு சீரமைப்பு திட்டவட்டமாகவலதுசாரிகளின் கையில் சிக்கி சோஷலிச அமைப்பையே முற்றிலும் தலைகீழாக்கியது.

சோஷலிசம் சோவியத் யூனியனில் தோல்வியடைந்துள்ளது என்பதை வேதனையுடன் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். இத் தோல்விக்கான காரணத்தை ஒரு கொர்பச்சேவில் மட்டுமன்றி கடந்த முக்கால் நூற்றாண்டுகால சோஷலிச நிர்மாணிப்பிலும் தேட வேண்டும். அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து சென்றதான கொர்பச்சேவின் போக்கும், சோஷலிசத்தைச் சரித்த காரணிகளில் ஒன்று என்பதில் சந்தேகமில்லை.

சோவியத் யூனியனில் ஏற்பட்டுள்ள சோஷலிச சரிவுஉலக சோஷலிசப் புரட்சிககு ஒரு பின்னடைவேயாயினும், இது உலக சோஷசத்தின இறுதி வீழ்ச்சியல்ல, உலக அரசியலில் சோஷலிசத்தின் வளர்ச்சி புதிய உத்வேகத்துடன் ஊற்றெடுக்கும். அதற்கான தலைமை தென்கோளத்திலிருந்து உதயமாகட்டும்.

சுகாதாரம்

# விசர்நாய்க்கடி

நாய் நன்றியுள்ள மிருகம். ஆனால், அதற்கு விசர் ஏற்பட்டால் நன்றியுணர்வு அறவே மறைந்துவிடும். உணவு கொடுத்து அன்பாக வளர்த்த எசமானைக்கூட மூர்க்கத் தனமாகக் கடித்துக் குதறிவிடும்.

விசர்நாய்க் கடி மிகவும் அபாயகரமானது. உடனடியாகத் தகுந்த சிகிச்சை அளிக்காவிடில் மரணத்தைத் தவிர்க்க முடியாது.

'றேபீஸ்' (*Rabies*) எனப்படும் ஒருவகை நோயினால் பாதிக்கப் படும்போது நாயிற்கு விசர் ஏற்படுகின்றது. இந்த நோய் ஒரு விஷக்கிருமியினால் உண்டாவது. நாயின் சரு மத்தில் ஏற்படும் ஏதாவதொரு காயம் அல் லது சிறு கீறலுக்கூடாக உடலினுட் புகுந்து மத்திய நரம்புத் தொகுதியை அடையும் இக் கிருமி அங்கு இனம் பெருகி நாயின் மூளை யைப் பாதிக்கின்றது.

இது நாயின் உடலினுட் புகுந்து நான்கு முதல் ஆறு வாரங்களுக்கிடையில் நோயை உண்டாக்கிவிடும். இக் காலத்தில் நாய் சோம்பலாகக் காணப்படும். காய்ச்சல் ஏற் படும். உணவை வெறுக்கும். விசர் ஏற்பட்ட தும் உறுமிக்கொண்டு குரைக்கும். வாயிலி ருந்து நீர்வடியும். அகப்பட்டவரையெல்லாம் கடிக்கும். விசர் ஏற்பட்டு மூன்றுக்கும் ஐந் துக்கும் இடைப்பட்ட நாட்களில் நாய் இறந் துவிடும்.

விசர்நாயினால் கடிக்கப் பட்டவருக்கு முதலில் மனப்பதற்றமும் அமைதியின்மையும் தோன்றும், பின் காய்ச்சல் ஏற்படும். மனதில் கவலையும் ஆவலும் காணப்படும். அச்சவு ணர்வும் நித்திரையின்மையும் இருக்கும். தொண்டையின் தசைநார்கள் தளர்ச்சிய டைந்து உணவு உண்ணவோ நீர் பருகவோ இயலாதிருக்கும். தண்ணீரைக் கண்டு பயப் படுவார். இந்த நோயை ஹைட்ரோபோபியா (*Hydrophobia*) எனவும் அழைப்பர். 'தண் ணீருக்குப் பயம் என்பது அதன் அர்த்தம்.

விசர்நாய் எனச் சந்தேகிக்கப்படும் நாய் கடித்தால் தாமதமின்றி அதற்கான சிகிச் சையை ஆரம்பிக்க வேண்டும். ஐந்து நாட் களுள் அந்த நாய் இறக்காவிடில் சிகிச்சை யைக் கைவிடலாம். ஏனெனில் விசர்நாய் ஐந்து நாட்களுள் நிச்சயமாக இறந்துவிடும்.

- சிவா -

## உலகின் முதல் செய்திப் பத்திரிகை.

உலகத்திலே முதன் முதலாக வெளிவந்த தினசரிப் பத்திரிகையின் பெயர் டசிங்பவோ (TSINGPAO) என்பதாகும். இது 6-ம் நூற்றாண்டில் சீனத் தலை நகராக பீக்கிங்கில் இருந்து வெளிவந்தது. எழுத்துக்களை செதுக்கியே (BLOCK) செய்திகளை வெளியிட்டார்கள் இது 1935 ம் ஆண்டு வரை தொடர்ந்து வெளிவந்தது. அடுத்து ரோமில் ஆரம்பிக்கப்பட்டது ரோமில் நடக்கும் நிகழ்ச்சிகளை பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். இவற்றை செய்திக்கடிதங்கள் என்று அழைத்தனர். பின் ஐரோப்பாவில் பாதைகளில் தினமும் அறிவுப் பலகை அமைத்து செய்திகளை எழுதி வந் தார்கள். ஜேர்மன் நாட்டில் 1609 -ம் ஆண்டு ஸ்ட்ராஸ் பர்கு என்னும் நகரத்தில் இருந்து உறவு என்னும் பத்திரிகையே முதன் முதலாக உலகில் அச்சுப் பதித்து வெளிவந்த பத்திரிகையாகும்.

இ. செல்வதர்சினி
ஆண்டு11-ம்
யாழ்நகர்க் கல்லூரி,
காரைநகர்.

மனித இனம் உயிர்வாழ்வதற்கு நீர் அத்தியாவசியமானது. அது மனிதகுலத்தின் உயிர்நாடி எனக் கூறலாம்.

உலகில் இடம் பெறும் சகல செயற்பாடுகளுக்கும் மூலசக்தி யாது என ஆராய்ந்த புராதன கிரேக்க சிந்தனையாளர் 'தேல்ஸ்', அது நீரே என்ற முடிவுக்கு வந்தார்.

உலகில் பெருமளவு நீர் உண்டு. ஆனால் அது முழுவதும் மனித பயன்பாட்டுக்கு உகந்ததல்ல. பூமியின் மேற்பரப்பிலும், கீழேயும் உள்ள நீர் முழுவதிலும் மூன்று வீதத்துக்குக் குறைவானதே மனித பாவனைக்கு உகந்த நன்னீர். அதில் ஆற்று நீரே மனிதனால் இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியது. இது

பாதிக்கப்படும். இதனாலேயே அரசனுக்கு அறிவுரை கூறிய ஔவையார் ''வரப்புயர'' என்றார்.

முற்காலத்தில் வளம் மிக்கனவாக இருந்த மெசொபத்தேமியா போன்ற பிரதேசங்கள் நீர்வளம் அற்றுப்போன காரணத்தால் இன்று வரண்ட பாலைநிலங்களாக மாறியிருப்பது எங்களுக்கு ஒரு படிப்பினையாக வேண்டும்.

தமிழீழ மக்கள் நிலத்துக்கு அடியிலுள்ள நீர்வளத்தையே பிரதானமாக நம்பி வாழ்கின்றனர். விசேடமாக, யாழ்குடா நாட்டில் ஆழ்நில நன்னீர் மாத்திரமே உண்டு. எனவே, ஆழ்நில நீர்வளத்தைப் பாதுகாப்பதில் நாங்கள் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும்.

ருந்து ஆவியாகும் நீர் முகிற் கூட்டத்தை ஈரலிப்பாக்குவதால் அதிகளவு மழைவீழ்ச்சிக்கு உதவுகின்றது. மேலும், பல்வேறு காரணங்களால் காட்டுநில மண் சொகுசானது. அது மற்றைய மண்களிலும் பார்க்க நீரை அதிகமாக உறிஞ்சும் தன்மையுடையது. இதனால் ஆழ்நில நீர்வளம் வற்றிப் போகும் அபாயம் ஓரளவுக்குத் தவிர்க்கப் படுகின்றது. காடுகளை அழிப்பது எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் செய்யும் மிகப்பெரிய துரோகம் என்பதைப் புரியாதவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

தோட்டப் பயிர்களுக்கு மத்தியான நேரத்தில் நீரிறைப்பதுவும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஒரு விடயம். இதனால் அதிகளவு நீர்

# நீர்வளம் காப்போம்

முழு நன்னீரிலும் .016 வீதம் மாத்திரமே எனக் கூறுவர். மிகுதி நன்னீர் முழுவதும் மனிதனால் இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாதபடி நிலத்துக்கு அடியிலும் பனிப்பாறைகளுக்குக் கீழேயும் உள்ளது.

நன்னீர் வளத்தைப் பாதுகாக்க வேண்டியது மனிதனின் பிரதான கடமை. ஆனால், மனிதன் குறுகிய சுயநல நோக்கில் செயற்படுவதால் நன்னீர் வளம் குறைந்து வருகின்றது. இதனால் ஐக்கிய நாடுகள் சபை எண்பதாந் தொடராண்டுகளைக் குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதார தசாப்தமாகப் பிரகடனப்படுத்தியது. இதை 'நன்னீர் தசாப்தம்' எனச் சுருக்கமாக அழைத்தனர். எனினும், நன்னீர் வளம் பாதிக்கப் படுவது நிற்கவில்லை.

ஒரு பிரதேசத்தின் நீர்வளம் அற்றுப் போனால் அப் பிரதேசம் வரண்ட பாலை வனமாகி மனித இனத்தின் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் மிக மோசமாகப்

எங்கள் தாயகத்தின் ஆழ்நில நன்னீர்வளம் சிறிது சிறிதாக அருகி வருகின்றதென அறிஞர்கள் கூறுகின்றனர். இது ஒரு அபாய எச்சரிக்கை. இதனால், காலப்போக்கில் எங்கள் தாயகம் வளமிழந்து வருங்காலச் சந்ததியினர் அல்லலுறும் அவலநிலை தோன்றக் கூடும். இந்த அவலம் ஏற்படுவதை நாம் அனுமதிக்கக் கூடாது.

முன்னர், கிராமங்கள் தோறும் பல சிறு குளங்கள் இருந்தன. மழைநீர் இவற்றில் சேகரிக்கப்பட்டு அந்நீரின் ஒருபகுதி நிலத்தில் ஊறிச் சென்று ஆழ்நில நீர்வளம் வற்றாதிருக்க உதவியது. இப்போது இக் குளங்களில் மிகப் பெரும்பாலானவை கவனிப்பாரற்றுத் தூர்ந்துபோய் விட்டன. இவற்றை மீண்டும் ஆழப்படுத்திப் புனரமைக்க வேண்டும்.

காடுகள் அழிக்கப் படுவதனாலும் நீர்வளம் பாதிக்கப் படுகின்றது. காட்டு மரங்களின் இலைகளிலி

ஆவியாகி விரயமாகின்றது. நீரிறைக்கும் யந்திரத்தினால் கிணறுகளை வற்ற இறைப்பதன் மூலமும் நீர்வளம் பாதிப்படைகின்றது என நீரியல் வல்லுனர்கள் கூறுகின்றனர்.

மேற்கூறியவிடயங்களை எங்கள் மக்களில் பலர் அறியாதிருக்கலாம். அறியாமையின் காரணமாக நீர்வளத்தைப் பாதிக்கும் செயல்களில் அவர்கள் ஈடுபடலாம்.

எங்கள் தாயகம் வளமிக்கதாக வேண்டுமென விரும்பும் சகலரும் நன்னீர் வளத்தைப் பாதுகாக்க முன்வரவேண்டும். இளைஞர்களும் யுவதிகளும் தங்கள் பெற்றோருக்கும் உற்றாருக்கும் இதன் முக்கியத்துவத்தை விளங்கப்படுத்த வேண்டும்.


வரப்போகும் ஆபத்தைப் புரிந்து கொண்டால் பெரியவர்கள் நிச்சயம் ஒத்துழைப்பார்கள்.

– காங்கேயன் –

• சிறுகதை

# விடியாத இரவுகள்

காங்கேயன்



ஓறிய குடிசை. உள்ளே ஒரே இருட்டு. இந்தக்குடிசை விளக்கொளியைக் கண்டு பல மாதங்களாகி விட்டன.

வெளியிலும் அந்தகார இருள்.

இருட்டோடு இருட்டாக வாசலில் குந்தியிருக்கும் சுகிர்தாவின் ஈரலித்த கண்கள் அடிக்கடி ஒழுங்கை மீது பார்வையைப்பதிக்கின்றன.

வருவோர் போவோரைக் காண முடியாத அளவுக்குக் கும்மிருட்டு என்பது அவளுக்குத் தெரியும். எனினும், கண்கள் அடிக்கடி அங்கே பார்க்கின்றன.

அருள் இன்னும் வரவில்லை. கந்தசாமி அண்ணர் கூறிய தகவலின்படி இதுவரையில் வந்திருக்க வேண்டும்.

''அவருக்கு ஏதாகிலும் நடக்கக் கூடாதது நடந்திட்டுதோ.''

நினைக்கும் போதே நெஞ்சு கனத்து... தொண்டை வரண்டு... இனம்புரியாத ஒரு பீதி.

''மறவன்புலவு முருகன் கோயிலடியிலை நிண்டிட்டான். கொஞ்ச நேரம் களைப்பாறிப்போட்டு வாறன் எண்டதாலை விட்டிட்டு வந்திட்டன். அவன் வருத்தக் காறனை இந்தக் கடும் பயணத்துக்கு ஏனடிபிள்ளை அனுப்பினனி?''

மத்தியானம் கந்தசாமி அண்ணர் சொன்னபோது மிகவும் சிரமப்பட்டு அழுகையை அடக்கினாள். இப்போது அடக்க முடியவில்லை.

சுகிர்தா அருளைத் திருமணம் செய்து ஐந்து வருடங்களாகி விட்டன. அந்த நேரம் அவன் ஒரு விவசாயத் தொழிலாளி. உழைப்பினால் உருக்கேறிய உடல்வாகு. சல்லிக்கட்டுக் காளை போலிருந்த அருள் தனக்குக் கணவனாகக் கிடைத்ததையிட்டுச் சுகிர்தா அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை.

அந்த ஆனந்தம் ஒருசில வடருங்கள் தான் நீடித்தது.

கொஞ்சக் காலத்துக்குப் பின் அருளின் உடலில் சோர்வு ஏற்படத் தொடங்கியது. நெஞ்சக்கோறை பிளவுபடுவது போல இருமினான். சளியோடு இரத்தமும் வெளியேறியது.

காசநோய்.

மயிலிட்டி வைத்தியசாலையில் சிறிது காலம் தங்கியிருந்து சிகிச்சை பெற்றபின் வெளியேறினான்.

மண்வெட்டி தோளை விட்டு அகன்றது. உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத தொழில் தேடினான். இணுவிலில் உள்ள 'பவர்லூம்" ஒன்றில் வேலை கிடைத்தது. உள்ளே வருபவர்களையும் வெளியே செல்பவர்களையும் பரிசோதிப்பதும் சில தொட்டாட்டு வேலைகளுமே அவனுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகள்.

குறைவான சம்பளத்துடன் மிகச் சிக்கனமாகக் குடும்பம் நடந்தது.

ஒரே மகளான ஜனனியின் எதிர்கால நல்வாழ்வுக்காக அருளும் சுகிர்தாவும் வயிற்றை மாத்திரமன்றி, உணர்வுகளையும் கட்டுப்படுத்தப் பழகிக் கொண்டனர்.

செல்லமாக வளர்த்த அந்த மகளுக்கு இன்று அடிக்க நேர்ந்ததை நினைக்கும் போது சுகிர்தா வால் தாங்கமுடியவில்லை.

ஜனனி சிறு குழந்தை. குடும்பத்தின் கஷ்ட நிலையை அவள் எப்படி அறிவாள்?

சாப்பாடு போதாதென்று அழுதாள். இல்லை என்று சொன்னால் புரிந்துகொள்ளக் கூடிய வயதல்ல.

கெஞ்சிக் கெஞ்சி உணவூட்டிய கையாலே, உணவு கேட்டபோது அடிக்கும் நிலை!

''குறுக்காலை போவாங்கள் அண்டைக்குச் செய்த அட்டுழியத்தாலை இப்ப நாங்கள் கஸ்டப்படுகிறம்'' என்று சுகிர்தா தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறாள்.

அவள் குறிப்பிட்ட அந்தச் சம்பவம்......

'பொம்மர்' சுற்றும் சத்தம் கேட்டதும் வழமைபோல முற்றத்துக்கு வந்து பார்க்கிறாள்.

வடக்கே வட்டம் போட்டுக் 'குத்தி' எழும்புகின்றது 'பொம்மர்'...... தொடர்ந்தும் குண்டுச் சத்தம்...... நான்கு தடவைகள்...... ஒரே புகை மண்டலம்.

''சுன்னாகம் பவர் ஸ்ரேசனுக்காம் போட்டவங்கள். எல்லாம் எரிஞ்சு போச்சாம்.''

பொழுதுபடும் நேரத்தில் அருள் வந்து சொன்னான்.

''அப்ப எனிக் கரண்ட் வராதேயப்பா?''

''கரண்டும் வராது. பவர்லூமும் ஓடாது. நாங்கள் நடுரோட்டிலை தான்.

'பவர்லூம்' ஓடவில்லை. அருளுக்கும் வேலை இல்லை.

அந்தக் குண்டுத் தாக்குதல் தான் தங்களின் துயரங்களுக்குக் காரணம் என்பது சுகிர்தாவின் அபிப்பிராயம்.

எதையும் ஆழமாகப் பார்க்கும் விசாலித்த அறிவு அவளுக்கு இல்லை. சிங்களப் பேரினவாதத்தைப் பற்றி அவளுக்குத் தெரியாது. சிங்களப் பேரினவாதிகள் நீண்ட காலமாகத் தமிழ் மக்களை நசுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதையோ, அப் பேரினவாதமே தமிழ் மக்களின் துயரங்களுக்கெல்லாம் மூலகாரணம் என்பதையோ, பேரினவாதிகளின் திட்டமிட்ட நடவடிக்கைகளில் ஒன்றுதான் சுன்னாகம் குண்டுத் தாக்குதல் என்பதையோ இதுவரை அவள் புரிந்துகொள்ளவில்லை.

சுகிர்தாவிடமிருந்த ஒன்றிரண்டு நகைகளையும் விற்று, அக்கம் பக்கத்தில் கடனும் வாங்கிச் சில மாதங்களை ஒருவாறு ஓட்டினார்கள்

இனிமேல் நகையும் இல்லை, கடனும் வாங்க ஏலாது. அருள் ஒரு முடிவுக்கு வந்தான்.

''முகட்டைப் பார்த்துக்கொண்டு நெடுக இருந்தால் முண்டு பேரும் பட்டினியிலை சாக வேண்டியது தானப்பா. மெல்ல மெல்ல எண்டாலும் வவுனியாவுக்குப் போய் ஏதாகிலும் சாமான் வாங்கி வந்து யாவாரம் செய்வம்.''

இது தான் அருளின் முதல் பயணம்.

சைக்கிள் சத்தம் கேட்கின்றது. அருள் தான்.

சுகிர்தா எழுந்து சென்று சைக்கிளைப் பிடிக்கிறாள்.

அருள் சாமான்களக் 'கரியரில்' இருந்து அவிழ்த்து இறக்குகிறான்.

இருமல்...... தொடர்ச்சியான இருமல்.

சுகிர்தா பனித்த கண்களால் அருளைப் பார்க்கிறாள்.

''கடவுளே! எங்களுக்கு விடிவே இல்லையோ!''—அவளின் இதயம் அழுகின்றது.

இவர்கள் இப்போது தொடர்ச்சியாக அனுபவிக்கும் துன்பங்களுக்கான உண்மைக் காரணத்தைப் புரிந்துகொள்ளும்வரை...... அதை அகற்றுவதற்கான சரியான வழியில் அடியெடுத்து வைக்கும்வரை... விடிவு இவர்களை அணுகாது.

### சீசரின் துணிச்சல்!

யூலியஸ்சீசர் கொல்லப்படுவதற்கு முதல் நாளிரவு சீசரின் மனைவி தீய கனவுகள் கண்டாளாம். அடுத்தநாள் காலை சீசர் தன்னை கௌரவிப்பதற்காக நடந்த விழா ஒன்றில் பங்கேற்பதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

அச்சம் கொண்ட அவன் மனைவி தான் கண்ட கனவினைக்கூறி அவன் செல்வதைத் தடுத்தாள். அப்போது சீசர் தன் மனைவியை நோக்கி கூறுகிறான்.

''அஞ்சினர்க்குச் சதமரணமஞ்சாத நெஞ்சத்தாடவனுக்கொருமரண மவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவரென்றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்குந்
துன்மதி மூடரைக்கண்டாற் புன்னகை செய்பவன் யான்
இன்னலும் யானும் பிறந்ததொரு தினத்திலறிவாய்
இளஞ்சிங்கக் குருளைகள்யாம் யான் மூத்தோனெனது பின்வருவதின்னலெனப்பகை மன்னரறிவார்''

சேக்ஸ்பியரின் கவிதையை மொழி பெயர்த்தவர் உயர் திரு. விபுலானந்தர்

# இனத்திற்காக..

அந்தக் கிணற்றில் இன்று அழுகுரல்கள் நிறைந்து ஒரே அமர்க்களமாயிருந்தது. சிறிது நேரத்தில் அந்த அழுகுரல்கள் ஓய அக்கிணற்றிலிருந்து ஒரு நச்சுப்பாம்பு வெளியேறி ஓடி மறைந்தது. கிணற்றினுள்ளே ஓரிடத்தில் தவளைகள் கவலையுடன் கூடின. அப்போ அங்கிருந்த தவளைகட்கெல்லாம் தலைவனான தலைமைத் தவளை எழுந்து பேசத்தொடங்கியது. ''எனதருமைக் குடிமக்களே- இன்றுடன் மூன்றாவது நாளாக இந் நச்சுப்பாம்பினால் அல்லல் பட்டுள்ளோம். இதுவரை எம்மில் ஒன்பதுபேரை இழந்துள்ளோம். இதற்கு நாம் முடிவு கட்டவேண்டும். எம் சொந்த இடத்தில் நிம்மதியாக வாழ வழி பிறப்பிக்க வேண்டும். எனவே இந்தப் பாம்பைப்பற்றி அறிந்துவர இந்த ஒற்றர் படைத் தலைவனை அனுப்பமுடிவு செய்துள்ளேன். அதனால் யாவரும் கவலைப்படாமல் கலைந்து செல்லுங்கள்'' இவ்வாறு தலைமைத்தவளை கூறிமுடித்தது. ஒற்றர் படைத்தலைவரான அந்த இளந்தவளை எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு கிணற்றை விட்டு வெளியேறியது.

சிறிது தூரம் சென்ற அத்தவளை திடுக்கிட்டது. அங்கு ஓரிடத்தில் தம்மைத் தாக்கிய பாம்பும் தவளைகளுமாக ஒன்றுசேர்ந்து ஒரு விழா நடத்திக் கொண்டிருந்ததே அதற்குக் காரணமாகும். ''இது எவ்வாறு சாத்தியமாகும்?'' என்ற அதன் கேள்விக்கு அங்கிருந்து பேசிக்கொண்டிருந்த ஓர் தவளையின் பேச்சு விடையளிப்பதாகவிருந்தது. ''எனதருமை சகோதர, சகோதரிகளே. ஒரு காலத்தில் கிணற்றிலிருந்த தவளைகளுடன் போரிட்டுத் தோற்று கிணற்றை விட்டு வெளியேறினோம். போதியளவு பலமில்லாது பழிவாங்கத் துடித்த எமக்கு நல்லதொரு துணை சமீபத்தில் கிடைத்துள்ளது. அதுதான் இந்தக் கார்கோடன் என்ற பாம்பு நண்பன். எனவே விரைவில் கிணற்றிலுள்ள தவளைகள் அழிக்கப்படுவார்கள். நாம் மீண்டும் அங்கு குடியேறலாம்.' இதைக்கேட்ட ஒற்றர் படைத் தவளைக்கு எல்லாம் புரிந்தது. அது சத்தம் செய்யாது மறைவாக வெளியேறி மனிதர்களின் பகுதியை அடைந்தது. அங்கிருந்து ஒரு சிறு போத்தலை எடுத்துக் கொண்டு கிணற்றை அடைந்தது.

கிணற்றுத் தவளைகளெல்லாம் தகவலறியும் ஆவலுடன் அதைச் சுற்றிக்கூடின. அது தலைமைத் தவளையின் அனுமதியுடன் பேசத் தொடங்கியது. ''என

**முத்து விஜயராகவன்**

● உருவகக்கதை

தருமை நண்பர்களே, ஒரு முறை எம்மினத்தைப் பிரிக்க நினைத்துத் தோற்றோடியவர்கள், இன்று கார்கோடன் என்ற நச்சுப்பாம்பை துணைகொண்டு எம்மை அடியோடு அழிக்க முயல்கிறார்கள். அம்முயற்சியில் இதுவரை ஏற்பட்ட முன்னேற்றத்திற்காக எதிரிகள் வெற்றிவிழாக் கொண்டாடிக் கொண்டிருப்பதை நான் என் கண்களால் நேரில்கண்டேன். எனவே நான் மனிதர் வாழும் பகுதிக்குச்சென்று ஒரு உயிர்கொல்லி மருந்தைக் கூடக் கொண்டுவந்துள்ளேன். இது பாம்பைக்கூடக் கொல்லுமென்று கேள்விப்பட்டேன். இதை எங்களில் ஒருவர் உடலில் பூசிக்கொண்டு பாம்புக்கு இரையானால் போதும். அப்பாம்பு இறக்கும். எமக்கு விடுதலை பிறக்கும். தொடர்ந்து யார் அதைச் செய்வது என்பது பற்றி தலைவர் கூறுவார்' என்று கூறி ஒற்றர் படைத் தவளை அமர்ந்து கொண்டது.

அடுத்ததாக தலைமைத் தவளை எழுந்து பேசத் தொடங்கியது. ''நாமெல்லாம் இறப்போமாயின் பின் அப்பாம்பு பசியால் தம்மையே கொல்லத்துணியும் 'என்பதை அறியாத எதிரிகளை என்னசெய்வது? அவர்களுக்கு பாடம் புகட்டி பாம்பைக்கொல்ல யார் போவது என்பது பற்றி எமக்குள் சண்டை வேண்டாம். எல்லோருமாகச் சேர்ந்து திருவுளச்சீட்டுப் போட்டு ஒருவரைத் தேர்ந்தெடுப்போம். இதுவே என் முடிவு'' என்று கூறித்தலைமைத்தவளை அமர்ந்து கொண்டது.

இதை ஆமோதித்த எல்லாத்தவளைகளும் திருவுளச் சிட்டுப் போடுவதில் மும்முரமாக ஈடுபட்டன. அப்போ ஒரு இளம் தவளை அதைத்தடுத்து என் இனத்திற்காக என் உயிரை அர்ப்பணிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். எனது முடிவு எம்மினத்திலிருந்து பிரிந்து சுயநலத்துடன் செயற்படும் பிரிவினை வாத சக்திகளுக்கும், வேறு ஆக்கிரமிப்புப் படைகளுக்கும் நல்ல பாடமாக இருக்கட்டும், இவ்வாறு கூறிய அத் தவளை உயிர் கொல்லித் திரவத்தை தன்னுடம்பில் பூசிக் கொண்டது. இதைப்பார்த்து ஏனைய தவளைகள் மெய்சிலிர்த்து நின்றன.

சிறிது நேரத்தில் கிணற்றிலிருந்து ஒருதவளைப் படையே வெளியேறியது. முன்னேற்பாட்டின் படி மற்றத் தவளைகள் ஓரிடத்தில் மறைந்து கொள்ள, பாம்பைக் கொல்லப்போகும் தவளை மட்டும் ஒரு வெளியான இடத்தில் நின்றுகொண்டது.

எதிர் பார்த்தபடி சில நிமிடங்களில் கார்கோடன் என்ற அந்தப்பாம்பு அவ்வழியில் வந்தது. 'கும்பிடப் போனதெய்வம் குறுக்கே வந்து நின்றமாதிரி''

(14ஆம் பக்கம் பார்க்க)

சமூகவியல்

# ஆண் : பெண் = 100 : 100 சாத்தியமா ?

பெண்களின் தொகை ஆண்களின் தொகையை விட அதிகரித்துச் செல்வதால் ஏற்படக்கூடிய சமூக பிரச்சனைகள் எவை என்பதை முதலில் நோக்குவோம்.

கலியாணச் சந்தையில் மாப்பிள்ளையின் விலை அதிகரித்துச் செல்லும். பல பெண்கள் 'கன்னிகளாகவே காலங்கடத்த வேண்டி ஏற்படும். வீட்டுடன் பெண்கள் இருக்கவேண்டிய நிலை ஏற்படுவதால் குறைந்த ஊதியம் உள்ள தொழில்களுக்கு பெண்கள் மேலும் அதிக அளவில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள், பெண்களின் மீதான சுரண்டலும், அடக்குமுறையும் மேலும் அதிகரிக்கும். பெண்கள் மலிவாக கிடைக்கக்கூடியதாக உள்ளதால் 'காதல்' என்ற பெயரில் பெண்கள் ஏமாற்றப்படுதல் அதிகரிக்கும். விபச்சாரங்கள் வளர்வதற்கான சமூகசூழல் மேலும் அதிகரிக்கும். தகப்பனின் பராமரிப்பு கிட்டாத தாயைமட்டும் அறிந்த குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இவைதான் இதனால் ஏற்படக்கூடிய சமூகப் பிரச்சனைகளில் சிலவாகும்.

தமிழீழத்தின் 50% க்கும் கூடிய மக்கள் ஒரு தார குடும்பத்தையே வைத்துப் பார்க்க முடியாத நிலையில் அல்லல் படுகிறார்கள். ஒருதார குடும்ப முறைக்குள் போவதற்கு அவசியமான பொருளாதாரம் இல்லையே என்று பயந்து குடும்பமாகாமலே வாழும் ஆண்களும், பெண்களும் இன்று தாராளமாகவே உள்ளார்கள். ஆகவே பொருளாதார சாத்தியப்பாடு என்ற கோணத்தில் இருந்து நோக்கினால் இன்றைய தமிழீழ சமுதாயம் பல தாரமுறை குடும்பங்களை தரித்திரர்களாக மாற்றிவிடுவது நிச்சயம். இது ஏற்கனவே நிருபணமாகியுள்ளது.

ஆண்மேலாதிக்கம், போர், பாரிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இவை எல்லாம் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சனைகள். மனிதனே இதற்கு தீர்வு கண்டாக வேண்டும், மனிதனால் இது முடியும் ஆகவே வாளாதிருக்க முடியாது.

இனி இப்பிரச்சனை எவ்விதம் அமைந்திருக்கிறது என்பதை நோக்குவோம். இந்தியாவில் சமீபத்தில் நடந்து முடிந்த குடிசனக் கணக்கெடுப்பு இது தொடர்பான பல பலனுள்ள தகவல்களைத் தந்துள்ளது. கடந்த 90 வருடங்களாக இந்தியாவில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களினதையும் விட குறைந்து வருகின்றது. இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமாக எடுத்துப் பார்த்தால் பல ஆச்சரியமான தகவல்களைக் காணலாம்.

அனைத்து இந்திய பால் விகிதம் (பால் விகிதம் என்பது 1000 ஆண்களுக்கு எத்தனை பெண் என்பதாகும்) 929 ஆகும். அதேநேரத்தில் கேரளமாநிலத்தில் பால் விகிதம் 1040 ஆகும் அம்மாநிலத்தில் மாத்திரம் பெண்கள் ஆண்களிலும் விட கூடிய தொகையினராய் உள்ளனர். இத்தனைக்கும் புள்ளிவிபரப்படி கேரள மாநிலமே தலா வருமானம் குறைந்த மாநிலமாக கணக்கிடப்பட்டுள்ளது. கேரளாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் ஆண்கள் 94.45%, பெண்கள் 86.3% மாகும். ஏனைய அனைத்து மாநிலங்களிலும் விட இதுவே முன்னணி வகிக்கிறது. அதேபோல் எழுத வாசிக்கத் தெரிந்த ஆண் பெண் வேறுபாடு 7.52% மாகும். இதுவே இந்திய மாநிலங்களில் மிகக்குறைந்த விகிதமாகும். அதேபோல் 1988 ம் ஆண்டு புள்ளிவிபரப்படி வருடாந்த இறப்பு பிறப்பு விகிதத்திலும் மிகக் குறைந்த விகித பிறப்பையும் மிகக் குறைந்த விகித இறப்பையும் கொண்டுள்ள மாநிலமும் கேரளாவே தான். 1970 களின் புள்ளிவிபரப்படி சிசு மரண விகிதத்திலும் கேரளாவே மிகக்குறைந்த இறப்பு விகிதத்தைக் கொண்டதாகவுள்ளது இவை தவிர வேறு பல விடயங்களிலும் கேரள மாநிலம் முன்நிலை வகிக்கிறது. சாதிப்பாகுபாடு மிகக்குறைவாகவே உள்ளது. வட - மாநிலங்களுடன் ஒப்பிடும்போது மத மோதல்கள் குறைவாகவே உள்ளது. அந்நியநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றோர் மிக அதிகமாக வாழும் மாநிலமும் கேரளாவேதான்.

இவற்றில் இருந்து நாம் என்ன முடிவுக்கு வருவது. சமூக - பொருளாதார வளர்ச்சி பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பை ஏற்படுத்த காரணமாக அமைகின்றதா? உலக பால் விகிதத்தைப் பற்றிய புள்ளி விபரமும் 'ஆம்' எனத் தலையாட்டுவது போலவே இருக்கின்றது. அட்டவணை 1ஐப் பார்க்கவும். சோசலிச நாடான சீனா பொருளாதார ரீதியில் ஒரு பின்தங்கிய வறிய நாடு என்று கூறமுடியாது. ஆனால் அங்கும் பெண்கள் தொகை ஆண்களினதையும் விட குறைவாகவே உள்ளது. காரணம் ஆராயப்பட வேண்டிய தொன்றாகும்.

இந்திய உடல்நூல்வியலாளர்கள் சிசு மரணத்தை இருவகையாக பிரிக்கிறார்கள் ஒன்று 1 மாதத்திற்கு உட்பட்ட சிசு மரணம் இது வழக்காறு - பிறப்புசார் மரணம் (neo-nabal) எனப்படும். மற்றையது 1 மாதத்திற்கு மேற்பட்ட சிசுக்களின் மரணம். இது பிந்திய வழக்காறு-பிறப்புசார் மரணம் (post neo-nabal) எனப்படும். முதலாவது வகை மரணம் (n-n) உடற்கூற்றியல். உடல் அகநிலை காரணம் சார்ந்தது. இரண்டாவது வகை மரணம் (Pn-n) சிசு வாழும் புறச்சூழலையே

பிரதானமாகக் கொண்டது. 1 வகை மரணத்தில் ஆண் சிசுக்களே அதிகம் மரணிக்கிறார்கள். இரண்டாவது வகை மரணத்தில் பெண்சிசுக்களின் மரணவிகிதமே அதிகமாகவுள்ளது. இயற்கை நியதியின்படி பெண் பாலார் ஆயுட் பலம் மிக்கவர்கள் என்பதற்கு இது மற்றோர் எடுத்துக் காட்டு எனக் கூறுகிறார்கள்.

## அட்டவணை 1

| பிரதேசம் | பால் விகிதம் |
|---|---|
| ஐரோப்பா | 1050 |
| வட-அமெரிக்கா | 1047 |
| உப-சாஹ்ரா ஆபிரிக்கா | 1022 |
| தென்கிழக்காசியா | 1010 |
| லத்தீன் அமெரிக்கா | 1000 |
| வடஆபிரிக்கா | 984 |
| மேற்காசியா | 948 |
| ஈரான் | 942 |
| சீனா | 941 |
| பங்காளதேஷ் | 940 |
| இந்தியா | 929 |
| பாக்கிஸ்தான் | 905 |

மூலம்: ஜூன் குப்ரேஸியும் அமாப்யா சென்னும்; "பசியும் பொதுஜன நடவடிக்கையும்" கிளறன்டன் ஒக்ஸ் போர்ட் - 1989.

குறிப்பு: இந்திய புள்ளிவிபரம் 1991க்கு ஆனவை ஏனையவை 1986க்கு ஆனவை.

குறிப்பிட்ட ஒரு நாட்டில் அல்லது பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு வருடத்தில் பிறந்த ஒரு குழந்தை வாழக்கூடிய சராசரி வருடங்களே **ELB (Expectation of life at Birth)** எனப்படும். வளர்ச்சி பெற்ற நாடுகளில் பெண்களின் **ELB** ஆண்களினதையும் விட கூடியதாகவே உள்ளது.

இன்னுமொரு விடயம் இங்கு கவனிக்கப்பட வேண்டும். இந்திய அறிஞர்களின் ஆய்வின்படி குறிப்பிட்ட ஒரு கால இடைவெளியில் சிசுவில் இருந்து 35 வயதுக் குட் பட்ட கால இடைவெளியில் பெண் மரண விகிதம் ஆண் மரணவிகிதத்தை விட அதிகமானது. அதே நேரத்தில் இதே இந்தியாவில் 35 வயதுக்கு மேல் பெண் மரணவிகிதம் ஆண் மரணவிகிதத்தை விட குறைவாகவே உள்ளது. முதிர்ச்சியடைந்த பெண்கள் பெண்களின் இயல்பான பலமிக்க உடலியற் காரணிகளால் ஆண்களையும் விட நீண்ட நாட்கள் வாழ்கிறார்கள் என்பதே இந்திய அறிஞர்களின் கருத்தாகும்.

35க்கு வயதுக்குட்பட்ட பெண்களின் மரணவிகிதம் அதிகமாக இருப்பதற்கும், பெண்கள் குறைவாகவுள்ள தற்குமான காரணத்தை இந்திய ஆய்வாளர்கள் பின் வருமாறு பட்டியலிடுகிறார்கள்.

(1) கருச்சிதைவுகள்.

(2) பெண் சிசுக்கள் புறக்கணிக்கப்படல்.

(3) பெண் குழந்தைகள் உளவியல் ரீதியாக ஒடுக்கப்படல்.

(4) பிரசவ காலத்தின் போதான தாய் மரணம்.

(5) இவை தவிர பெண்கள் என்ற காரணத்தால் ஏற்படும் மரணங்கள் - (கற்பழிப்பு, சீதனக் கொடுமைகள், இடைவிடாத மகப்பேறு இத்தியாதி)

இன்னுமொரு விடயம், இயற்கையின் நியதியின் படி பெண்பாலரே அதிகம் தோன்றுகிறார்கள் என அறிஞர்கள் கருதுகிறார்கள். 100 ஆண்களுக்கு 105 பெண்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் இது சரியான ஆதாரங்களுடன் நிருபிக்கப் படவில்லை.

சரி, இப்போது நாம் எமது பிரச்சனைக்கு வருவோம். பெண் ஆண்களிலும் விட கூடுதலாக இருக்க வேண்டியதே இயல்பான போக்காகும். வளர்ச்சி பெற்ற நாடுகளில் இவ் இயல்பான போக்கதை நாம் காணக்கூடியதாய் உள்ளது. இந்தியாவில் கேரளமா நிலத்திலும் நாம் இதைக் காண்கிறோம். சமூகவியல் தொடர்புபட்ட விடயங்களில் கேரளாவை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும். என்ற கருத்து இந்தியாவின் பல்வேறுபட்ட பிரிவினராலும் வலியுறுத் தப்பட்டு வருவதை இங்கு குறிப்பிடவேண்டும்.

தமிழீழத்திலும் பெண்கள் ஆண்களை விட அதிகமாகவே உள்ளார்கள். தமிழீழம் உட்பட இலங்கைத் தீவு இந்தியாவையும் விட - தமிழ் நாட்டையும்விட, சமூக பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற்றது என்பது அனைவரும் அறிந்ததே. கேரள மாநிலத்தில் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு எவை காரணமாய் உள்ளனவோ அதே தான் இங்கும் உண்டு எனச் சொல்லலாம். எமது போரில் ஆண்களின் இறப்பு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு காரணியாக வில்லை. அதேபோல் இன ஒழிப்பையும் ஒரு காரணமாகச் சொல்லமுடியாது; ஏன் எனில் இங்கு ஆண் பெண் இறப்பு விகிதம் பெருமளவில் வேறுபட்ட தொன்றல்ல. ஆய்வுகளே இதைச் சரியாக நிரூபிக்கும்.

சமூக - பொருளாதாரம் வளர்ந்து செல்லும் நிலையில் எக் காரணத்தைக் கொண்டும் பெண்களின் எண்ணிக்கையை ஆண்களின் எண்ணிக்கைக்கு சமமானதாக்கவோ குறைக்கவோ முடியாது. இது சமூக இயல்பான வளர்ச்சி விதிக்கு எதிரானதாகும். சமத்துவமான பொருளாதார பகிர்வும், ஆண்மேலாதிக்கமும், மனோ வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் சமூக - பொருளாதார - பண்பாட்டு காரணிகளும் நிலவும் வரைதான் இந்த விகிதாசாரவேறுபாடு வேண்டத்தகாத சமூக பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும்.

பொருளாதார சமத்துவமும், ஆண்-பெண் சமத்துவமும் மனோ வளர்ச்சியைத் தூண்டும் சமூக பொருளாதார பண்பாடுகளும் கொண்ட ஒரு புதிய சமுதாயம் தோற்றுவிக்கப்படும்போது எண்ணிக்கை வேறுபாட்டைத் தீர்ப்பதற்கான சமூக நிபந்தனைகள் உருவாகிவிடும். பொருளாதார வளர்ச்சி விகிதத்திற்கும் குடிசன பெருக்க வளர்ச்சி விகிதத்திற்கும் இடையே பேணப்படவேண்டிய சமநிலையைப் பொறுத்து புதிய சமூக ஒழுங்கு உருவாக்கப்படும். இவ் ஒழுங்கே இவ் வேறுபாட்டிற்கான தீர்வாகவும் அமையும். அது எவ்விதம் என்பது முன்கூட்டியே சொல்லமுடியாது.

## இனத்...

*(11 ஆம் பக்கத் தொடர்ச்சி )*

குறுக்கே நின்ற தவளையை பாம்பு அணுகியது. தன்னைக்கண்டு அஞ்சாது வீராவேசமாக தவளை எதிர்த்துப்பேசியதால் பாம்பு கோபங்கொண்டு வாயை அகலத் திறந்து அவுக்கென்று தவளையை விழுங்கிக் கொண்டது. இதையெல்லாம் தூரத்தே நின்று உணர்ச்சிப் பெருக்குடன் கிணற்றுத்தவளைகள் பார்த்துக் கொண்டிருந்தன.

சிறிது நேரத்தில் கார்கோடனென்ற அப்பாம்பு உருண்டது, பிரண்டது, தாங்கமுடியாத வேதனையால் சுருண்டது, விரைவில் இறந்தே போனது.

இதைத் தூரத்தே நின்று பார்த்துக்கொண்டிருந்த கிணற்றுத் தவளைகளின் எதிரித் தவளைகள் பீதியடைந்தன. அந்நேரம் மறைவிலிருந்து வெளிப்பட்ட கிணற்றுத்தவளைகள் எதிரிகளைத் தாக்கலாயின, பின் கிணற்றுத்தவளைகள் வெற்றியுடன் கிணற்றுக்குத் திரும்ப எதிரித்தலைவனும் சில தவளைகளும் காயத்துடன் தப்பி ஓடிக்கொண்டிருந்தன.

## பிளாஸ்ரிக் சந்திரசிகிச்சை

உடலில் காணப்படும் குறைபாடுகள் அற்றுப்போகும் வகையில் செய்யப்படும் சத்திர சிகிச்சையைப் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை என அழைப்பர். பிறப்பில் அல்லது பாரிய நோயினால் அல்லது விபத்தினால் ஏற்படும் ஊனத்தோற்றத்தை இச் சத்திரசிகிச்சை மாற்றியமைத்து அழகிய தோற்றத்தைக் கொடுக்கின்றது. இயல்பான உருவ அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் இச் சத்திரசிகிச்சையைப் பயன்படுத்துகின்றனர்.

பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை பிளாஸ்ரிக்கைப் பயன்படுத்திச் செய்வதில்லை. உடலின் ஆரோக்கியமான பகுதியிலிருந்து இரண்டு படை தோலை வெட்டியெடுத்துத் தேவையான இடத்தில் பொருத்தமான முறையில் ஒட்டுவதன் மூலமே இச் சத்திரசிகிச்சை செய்யப்படுகிறது.

பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை முதன்முதலாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் செய்யப்பட்டது.

- சிவா

விபுலானந்தர் கட்டுரை வரிசை

# தமிழன் ஒரு இன-மொழி வழிக் குழுமம்

உயர்திரு விபுலானந்தரின் காலத்தில் ஆரியரின் அதுவும் குறிப்பாக பாரதத்தின் தொன்மை மிக்க நாகரிகத்தையும், 'ஆன்மீக ஒழுக்கத்தையும்' விட்டுக்கொடுக்க கூடாது என்ற உணர்வு தேசப்பற்றும், இனப்பற்றும் உள்ள படிப்பாளிகளிடையே ஆழமாக நிலவி வந்தது. பிரித்தானியர்பாரதத்தை ஒரு அநாகரிக பிண்டமாக படம் பிடித்துக் காட்ட முற்பட்டதன் விளைவே இதுவாகும். இதை எதிர்ப்பது தேசபக்த புத்திஜீவிகளின் அன்றைய தேவையாய் இருந்தது.

ஜவஹர்லால் நேரு, மோகன்லால் காந்தி, ரவீந்திர நாத் தாகூர், சுவாமி விவேகானந்தர் இதில் நல்ல பங்காற்றினார்கள். இலங்கையில் பொன் அருணாசலம் உயர்திரு விபுலானந்தர் போன்ற தமிழர்கள் இது தொடர்பாக பல பணிகள் ஆற்றியுள்ளார்கள்.

உயர் திரு விபுலானந்தரின் 'மேற்றிசைச்செல்வம்' என்ற நூலும் அதில் ஒன்றாகும். 12 அதிகாரங்களாக பிரிக்கப்பட்டுள்ளதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்நூலின் முதலிரு அத்தியாயங்களிலும் தமிழன் ஒரு நீண்ட வரலாறுடைய ஒரு இன-மொழி வழிக் குழுமம் என்பதை அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆனால் அறிவு-சார் வாதங்களுடன் ஆதாரத்துடன் சமர்ப்பிக்கிறார். இக் கட்டுரையின் இரண்டாவது நோக்கம் இதுபோலவே தெரிகிறது. மேற்றிசை நாடுகளின் பெருமையை எடுத்துச் சொல்வதே 1 வது நோக்கம்.

மேற்றிசையைச் சேர்ந்த சுமேரிய, பபிலோனிய, யவனபுர, எகிப்திய நாகரிகங்களை ஆராய்வதே 1 வது அத்தியாயமாகும். இதில் சுமேரிய நாகரிகமே அனைத்து நாகரிகத்துக்கும் ஆரம்ப காரணி என்ற உண்மை ஆராய்ந்து தாபிக்கப்பட்டதாகும் எனக்கூறுகிறார். தொடர்ந்து ''இச் சுமேரிய நாகரிகத்துக்கும் தமிழ் நாட்டு நாகரிகத்துக்கும் ஒற்றுமை காணப்படுகிறது'' என்கிறார்.

இதற்கு ஆதாரமாக, புதிய ஆராய்ச்சி முறையின் முடிவாக பிரபல ஐரோப்பிய வரலாற்றாய்வாளர்கள் கூறியவற்றின் மொழிபெயர்ப்பை முன்வைக்கிறார். ''உலகத்தில் முதன் முதற் கட்டிடங்களையும் பட்டணங்களையும் உருவாக்கியவர்கள் சுமேரியர் என்னும் சாதியார். இவர்கள் யூத வகுப்பு ஆரிய வகுப்பைச் சேர்ந்தவர்களல்லர். எங்கிருந்து வந்தவர்களோ தெரியவில்லை. இவர்களுடைய பாஷை பலுக்கிஸ்தானத்தின் சில பாகங்களிலும் காக்கேசிய மலைநாட்டிலுமுள்ள பாஷைகளையும் ஸ்பானியாவில் ஒரு பாகத்திற் பேசப்படுகிற பாஸ்க் என்னும் பாஷையையும் ஒத்திருக்கிறது. இப் பாஷைகள் எல்லாம் திராவிட மொழியோடு நெருங்கிய சம்பந்தமுடையன. .... எகிப்து, இந்தியா முழுமையிலும் தென்அமெரிக்காவின் பீரு, மெக்சிக்கோ இரு நாட்டிலும் வேறு சில நாடுகளிலும் பரவி வாழ்ந்த இவர்கள் கிறிஸ்து சகாப்தத்துக்கு 10,000 ஆண்டுகள் முற்பட்டவர்கள். ...... கி. மு. ஆயிரம் ஆண்டு வரையும் இது நீடித்தது. அதன் பின் வடக்கில் இருந்து வந்த வெள்ளை நிறமுள்ள ஒரு ஜாதியினர் இவர்களைத் துரத்திவிட்டார்கள். ......... ஆரிய பாஷை வருதலும் இவர்களுடைய மொழி அழிந்து போயிற்று'' ........

**வாமணன்**

''சென்ற வருஷத்திற் கிரீற் என்னும் பண்டிதர் கி. மு. 3000 ஆண்டு முன்னுள்ள அச்சாசனங்களிற் எழுதப்பட்ட மொழியும் திராவிட மொழியோடு சம்பந்தமுடையதென்றார்.''

........'' பின்னும் யவன மொழி எழுத்துக்களின் வடிவம் தமிழெழுத்துக்களோடும் கிரந்த லிபியுள்ள எழுத்துக்களோடும் தொடர்புடையதாக காணப்படுகிறது''......

விவேகானந்த சுவாமிகளால் எழுதப்பட்ட 'பரிவிராஜகம்' என்னும் நூலில் கூறியதை மேற்கோள் காட்டுகிறார்.

''கருநிறமும் நீண்ட மயிரும் நேரிய மூக்கும் சரிவில்லாக் கரிய விழியும் உடைய ஒரு சாதியார் பூர்வ எகிப்திலும் பாபிலோனியத்திலும் வசித்தார்கள். இச்சாதியார் இந்நாளில் இந்தியா முழுமையிலும் விசேஷமாக தெற்கு பாகத்திலும் வசித்து வருகிறார்கள். ஐரோப்பாவின் சில பாகங்களிலும் இவர்களைக் காண்டல் கூடும். இவர்களே திராவிடர் எனப்படுவர்.''

யவனபுரத்து கலைச் செல்வம் என்ற இரண்டாவது அத்தியாயத்தில், ''வடமொழியாளர் வரிவடிவெழுத்தைத் தமிழ் மொழியாளரிடமிருந்து பயின்று கொண்டாரென்பது றைஸ் டேவிஸ் முதலிய ஆங்கில பண்டிதர்களது சித்தாந்தமாகும்'' எனக்கூறி அதை நிரூபிக்க உதாரணங்களையும் தருகிறார்.

''பழைய சாசனங்களில் வழங்குகிற வட்டெழுத்துத் தொல்காப்பியர் காலத் தெழுத்தினின்றுந்

# கல்வியில் கிராமம்



- விவேக்

கிராமப்புற இளைஞர் மத்தியில் கற்றோரின் தொகை மெல்ல மெல்ல அதிகரித்து வருவதை இன்று அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கற்கவேண்டும் என்கிற ஆர்வமும், உயர்கல்வியை தொடர வேண்டும் என்கிற முனைப்பும் அவர்களிடம் வேகமாக வளர்ந்து வருகின்றன.

கிராமங்கள் என்பதற்கு உதாரணமாக வன்னிப் பகுதி கிராமங்களை எடுத்துக் கொள்வோம்.

ஆரம்பகாலங்களில் இங்கு கல்வி மீதான ஆர்வம் மிகக் குறைவாகவே இருந்தது.

இங்குள்ள பெற்றோர் படிப்பறிவு அற்றவர்களாக அல்லது, படிப்பறிவு குறைந்தவர்களாக இருந்தமைஇதற்கு காரணம் எனலாம்.

விவசாயம் போன்ற, தாங்கள் செய்யும் தொழில்களையே தங்களது பிள்ளைகளும் தொடர்ந்தால் அதுவே போதுமானது. அதற்கு கல்வியறிவு அவசியமில்லைஎன்பதே பெரும்பாலான பெற்றோரின் நோக்கமாக இருந்தது.

வசதிபடைத்த அல்லது, ஓரளவு கல்வி பயின்ற பெற்றோரேதங்களது பிள்ளைகள் படித்து முன்னேறவேண்டும் என்று எண்ணினர்.

இதற்காக தங்களது பிள்ளைகளை நகர்ப்புறங்களுக்கு அனுப்பி கல்வி பயிலவும் அவர்கள் வகை செய்தனர்.

இப்பகுதிகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் என்றாலும் சரி அலுவலகங்களில் உத்தியோகம் செய்யும் சாதாரண ஊழியர் என்றாலும் சரி அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்தே தினசரி வந்து சென்றனர்.

இவ்வாறானதோர் நிலமை இன்று வேகமாக மாற்றமடைந்து வருவதை கண்கூடாகக் காண முடிகிறது.

இப்போது கிராமப்புற பாடசாலைகளில் கல்வி பயின்ற இளைஞர்களே அப்பகுதி பாடசாலைகளின் ஆசிரியர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

அலுவலகங்களிலும் இந்நிலை தோன்றி வருகின்றது.

நகர்ப்புற மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்குமிடையே கல்வி பற்றிய நோக்கில் வித்தியாசங்கள் உள்ளன.

நகர்ப்புறங்களில் கல்வி குறித்த ஆர்வத்தையும், தூண்டுதல்களையும் சிறுவயதிலேயே தமது பிள்ளைகளுக்கு பெற்றோர் ஊட்டி விடுகின்றனர்.

விபரம் தெரியாத சிறு வயதிலேயே அவர்களின் பெற்றோர் வைத்தியருக்குப் படிக்கவேண்டியது பற்றி, பொறியியலாளராக படித்து வரவேண்டியது பற்றியெல்லாம் கூட குழந்தைகளுக்கு சொல்லத் தொடங்கி விடுகின்றனர்.

கல்விபற்றிய எவ்வித தூண்டுதல்களும் கிராமத்து பிள்ளைகளுக்கு பெற்றோர் மூலம் கிடைப்பதில்லை.

ஒரு மாணவன் சிலசமயம் தனக்கு கற்பிக்கும் ஆசிரியரைப் பார்த்து விட்டு தானும் படித்து அப்படியொரு ஆசிரியராக வரவேண்டும் என கற்பனை செய்திருக்கலாம்.

இவ்வேளையில் - கல்வி பற்றிய ஆர்வத்தை கிராமப்புற மாணவர்களுக்கு தூண்டியவர்கள் நகர்ப்புறங்களில் இருந்து சென்று கற்பித்த சில பொறுப்புணர்வுமிக்கஆசிரியர்களேஎன்பதை இங்குகுறிப்பிடவேண்டும்.

இன்று கிராமங்கள் தோறும் கற்போர் அதிகரித்து கற்றோர் சூழல் ஒன்று உருவாகி வருவதற்கு இந்த ஆசிரியர்கள் தாம் காரணம்

ஆனாலும், சில பின்தங்கிய கிராமங்கள் கல்வியில் இன்னும் பழைய நிலையிலேயேஇருந்து வருகின்றமை கவலைக்குரியதாகும்.

திரிவுபட்டதா மாயினும் உள்ள வற்றுட் பழைமையானதாதலின் அதனையே பழந்தமிழெழுத் தெனக் கொள்வோம். இப் பழந் தமிழ் எழுத்துக்கும் யவனபுர அக்ஷரத்துக்கும் (எழுத்து) உருவ ஒற்றுமை இருக்கிறது.''

இத்துடன் நிற்கவில்லை. பல ஆதாரங்களுடன் கீழ்வரும் கூற்றை நிரூபிக்கின்றார். ''அங்கனமா தலின், யவனபுர நெடுங்கணக்குத் தமிழ் நெடுங்கணக்கோடு பூரண ஒற்றுமையுடையதென்பது நிறுவ படுகின்றது.''

......... ''தமிழ் வரிவடிவெழுத் துக்கும் யவனபுர வரிவடி வெழுத் துக்கும் உள்ள தொடர்பினை நோக்கும்போது, தமிழரும் யவன புரத்தாரும் பினீசியரிடமிருந்து எழுத்து முறையைப் பயின்று கொண்டார் என்றெண்ண வேண்டியிருக்கிறது.''

......... ''இங்ஙனம் பயின்று கொண்ட காலம் கி. மு. ஏழாவது நூற்றாண்டு என்பர்; பினீசிய எழுத்து எகிப்திய சித்திர வெழுத் தின் வழிவந்தது; மிகப் பூர்வீக மானது.''

உயர்திரு விபுலானந்தர் இங்கு கூறவருவது எது?
அன்றைய தமிழன்:

- ஒரு இன - மொழி குழுவினன்
- மிகத் தொன்மையான நாக ரிகத்தைக் கொண்டவன்.
- பல ஆயிரமாண்டுப் படிமவளர்ச் சியின் மூலம் (பரிணாமவளர்ச்சி) தனது மொழியை தானே உரு வாக்கிக் கொண்டவன்.
- ஒரு இன-மொழி குழுவென்ற முறையில் இன்று தென் இந்தி யாவிலும், ஈழத்திலும் மாத்தி ரம் வாழ்ந்தாலும் ஒரு இனம் (திராவிடன்) என்ற முறை யில் உலகின் பல பாகங்களில் பரவி வாழ்ந்தவன்.
- அவனது நாகரிகத்தை அவனே உருவாக்குவது என்ற அடிப் படையில் நின்ற வண்ணம் பிற நாகரிகங்களோடு தொடர்ச்சியாக கொடுக்கல் வாங்கல் உறவு வைத்துக் கொண்டுள்ளவன்.

அடுத்த இதழில் இன்றைய தமிழ னின் நிலைக்குச் செல்வோம்.

## உயிருள்ள 'பியானோ'

நியட்ஸே, ஜேர்மானிய சிந்தனையாளர் 19 ம் நூற்றாண்டில் ஜேர்மனியில் பிறந்தவர். இவரது 'அதிமானுடம்' எனும் தத்துவம் பிரபல்யம் வாய்ந்தது. இது ஏற்புடைய ஒன்றல்ல. ஆயினும் அவர் வாழ்வில் நிகழ்ந்த சுவாரஸ்யமான ஒரு சம்பவம் மனதை ஆழமாகத் தைக்கவல்லது.

இவன் இளைஞனாக இருக்கும் போது தன் கிராமத்தை விட்டு முதன் முறையாக பேர்லின் நகருக்கு வந்தான். நகருக்கு வந்த இவன் அந்நகரை முன்பின் தெரியாதவனாகத் தன்னை ஒரு விடுதியில் வடுமாறு ஒரு குதிரை வண்டிக்காரனிடம் கேட்டான். ஆனால் அவனோ நியட்ஸேயை ஒரு விபச்சார விடுதியில் இறக்கிவிட்டான்.

பெட்டி படுக்கைகளுடன் உள்ளே நுழைந்த நியட்ஸேயை அரைகால் நிர்வாணத்துடன் நின்ற பெண்கள் வரவேற்றனர். ஆனால் நியட்ஸே வரவேற்பு மண்டபத்துள் தனது பெட்டி படுக்கைகளை வைத்து விட்டு சுற்றுமுற்றும் பார்த்தான். அங்கே ஒரு 'பியானோ' வாத்தியம் அவன் கண்ணிற்பட்டது.

பியானோ வாசிப்பதில் வல்லவனான நியட்ஸே தனது மனம் அதிர்ந்த நிலையிலும் அவ் வாத்தியத்தை வாசிக்கத் தொடங்கினான். அங்கிருந்த பெண்கள் எல்லோரும் மெய்மறந்து இரசிக்கத் தொடங்கினர். மிக ரசனையாக வாசித்து முடித்த நியட்ஸே தனது பெட்டி படுக்கை களை நெருங்கி அவற்றைக் கையிலெடுத்துக் கொண்டு புறப்பட முயன்றான்.

அப்பொழுது அந்த விலைமாதுப் பெண்களில் ஒருத்தி நியட்ஸேயைப் பார்த்து ''ஓ அபூர்வ மாணவனே! நாங்கள் நிற்பது உனக்குத் தெரியவில்லையா? இசை மீட்டிய உனது கரங்கள் என்னை அரவணைக்காதா''? என்று கேட்டாள்.

அதற்கு நியட்ஸே பின்வருமாறு பதிலளித்தான்; ''இங்குள்ளஒரே ஒரு உயிருள்ள பொருள் இந்த பியானோதான் அதனை மீட்டிய கரங்களால் இந்த வெற்றுடலை நான் அணைக்க மாட்டேன்'' என்று கூறிவிட்டு மிடுக்குடன் பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு திரும்பி னான். அவன் வாசலைக் கழியும் வரை பெண்கள் விறைத்து நின்றனர்.

நூலறிமுகம்

# கல்விக் கதிர்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப்பிரிவின் வெளியீடான ''கல்விக்கதிர்'' 1991 மே மாதம் நடுப்பகுதியில் இருந்து வெளிவருகிறது. முதல் மூன்று இதழ்களும் கிழமைக்கு ஒரு இதழ் என்ற முறையில் வெளிவந்தது. நாலாவது இதழ் ஆகஸ்ட் 3 வது கிழமையே வெளிவந்துள்ளது. இடையில் ஏதோ சில தடங்கல்கள் ஏற்பட்டுவிட்டன போலும். இது ஒரு பிரதி ரூ 5/ = ஆக விற்கப்படுகிறது.

இவ் வெளியீட்டின் முதலாவது குறிப்பிடக்கூடிய அம்சம் என்னவென்றால், இவ் இதழ்கள் முறைசாராக் கல்விப் பிரிவினரால் செய்யப்பட்ட கடுதாசியிலேயே அச்சுவாகனம் ஏற்றப்பட்டிருப்பதேயாகும். ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி என்று சொல்பவர்களைப் போல் இல்லாமல், இறக்குமதியாக்கப்பட்ட பொருட்களை அடிப்படையாகக் கொண்டுதான் 'முருகியல்' (அழகியல்) அடைவுகளை எய்தவேண்டும் என்ற கண்ணோட்டத்திற்கெதிரான இம் முயற்சியும், துணிவும் பாராட்டிற்குரியன.

இவ் இதழ் கல்வியியல் தொடர்பான விடயங்களுக்கே அழுத்தம் கொடுத்துள்ளது. கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துதலே இதனது நோக்கமாகவுள்ளது. நான்கு இதழ்களிலும் கீழ்க்கண்ட விடயங்கள் தொடர்பான தொடர் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

(1) மனித உரிமைகள் பற்றிய தொடர், (2) பாடசாலை முகாமைத்துவம் பற்றி (3) வாழ்க்கைக் கல்வி (4) நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடேஇருக்குதுதம்பி. (கல்வியில் குறிக்கோள் பற்றிய கட்டுரை) (5) முதலுதவிக் கல்வி ஏன்? (6) முறைசார்க்கல்வி.

இவை தவிர ஒவ்வொரு இதழிலும் சிறு கைத்தொழில் உற்பத்தி சம்பந்தமான வழிகாட்டல் குறிப்பும் வெளிவருகிறது. கவிதையும், குட்டிக் கதையும் கூட ஒவ்வோர் இதழிலும் பிரசுரமாகின்றது.

நிலவும் கல்வி அமைப்பு பற்றிய விமர்சனங்களும், அவசியமான கல்வி அமைப்புப் பற்றிய வழிகாட்டல்களும் கோட்பாடு என்ற மட்டத்திலேயே அமைந்துள்ளன; இதனால் இக்கட்டுரைகள் பரந்த ஜனரஞ்சகத் தன்மை பெறுவது சற்றுச் சிரமமானதுதான். ஆனால் எமது தேசத்தின் கல்வியில் மாற்றத்தை விரும்பும் சிந்தனையாளர்கள் கட்டாயமாக கற்கவேண்டிய ஒரு நூலாகும். ஆம் 'கல்விக்கதிர்' வாசிப்பதற்கோ, படிப்பதற்கோ மட்டும் உரியதொன்றல்ல, அது கற்பதற்குரிய ஒரு இதழாகும். கல்விக் கோட்பாடு என்று சொல்லும்போது முன்னைய பெரியோர்களின் உரைகளும், படைப்புகளுந்தான் ஆதாரங்காட்டப்படுகின்றன. இது இன்று பட்டம்பெற்ற கல்விமான்கள் என கூறப்படுவோர் மத்தியில் ஒரு காலக்கோலமாகிவிட்டது (ஃபஷன்). 'கல்விககதிர்' இதற்கு எதிர்மாறாகச் செயற்படுகிறது. இன்றைய யதார்த்த நிலைக்குப் பொருத்தமான ஒரு கோட்பாட்டை யதார்த்த நிலமைகளிலும் அனுபவங்களிலும் இருந்து உருவாக்க முற்படுகின்றது.

இன்றைய கல்வித் திணைக்களமும், கல்வி அமைப்பின் உயர் அங்கங்களும் கல்வியின் நோக்கம் பற்றி சரியாகவே சொல்லியிருக்கின்றன என்பதுவும் கல்வி நிறுவனங்கள் குறிப்பாக ஆசிரியர்கள் அதைச் சரியாக நிறைவேற்றவில்லை என்பதுவுந்தான் 'கல்விக்கதிரின், கணிப்பீடாகும். இது உண்மையே ஆசிரியர்களையும், மாணவர்களையும் இதற்கு தயார்படுத்துவதுதான் 'கல்விக்கதிரின்' நோக்கமாய் உள்ளது. இது பாராட்டவேண்டியதொரு முயற்சி. ஆனால் கல்வித் திணைக்களத்தால் தனது நோக்கத்தை நிறைவேற்ற முடியாது போனமை ஏன் என்பது ஆராயப்படவேண்டும். அப்போதுதான் கல்விச் சீர்திருத்தத்துக்கான அடிப்படை முடிவுகளுக்கு வரமுடியும். இவ்விதமான கட்டுரைகளையும் 'கல்விக்கதிர்' பிரசுரிப்பது அவசியமானது.

இவ் இதழ் யாழ் குடாநாட்டிற்கு வெளியே வினியோகிக்கப் படவில்லைப் போலும். வெளியீட்டாளர்களும் விநியோகஸ்தர்களும் இதைக் கணக்கில் கொள்வது நல்லது.

### இக்கட்டில் கார்ல் மார்க்ஸ்

கார்ல் மாக்ஸிடம் ஒருவர் ஒரு கேள்வி கேட்டார். ''மனைவிக்கு அடிக்கும் கணவனைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' அதற்கு அவர் ' அவனை வாழ்நாள் முழுவதும் கட்டிப்போட்டு அடித்தாலும் எனது கண்கள் ஒரு துளி கண்ணீரைக் கூட சிந்தாது''. இவ்வாறு கூறினார் பெண்கள் மீது இரக்கசிந்தையுள்ள மார்க்ஸ்.

ஒரு நாள் மார்க்சும் அவரது நண்பரும் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது வழியில் ஒருவன் தன் மனைவிக்கு அடித்துக் கொண்டிருந்தான். மார்க்ஸ் அதில் தலையிட முற்பட்டார். ஆயினும் அவரது நண்பன் சூழலை சுதாகரித்துக் கொண்ட நிலையில் மாாக்ஸைத் தடுத்தான். ஆனால் மார்க்ஸோ அதனை மீறித் தலையிட்டார்:

குடிபோதையில் அடிபட்டுக் கொண்டிருந்த கணவனும் அவன் மனைவியும் மார்க்சுக்கு எதிராக சீறினர். மார்க்ஸின் முகத்தில் அசடு வடிந்தது.

கடந்த செப்ரெம்பர் 11-ம் திகதி மகாகவி பாரதியின் நினைவு தினம் அதனையொட்டி, கவிஞர் அப்துல்ரகுமான் எழுதிய கவிதை வரிகள் இங்கு பிரசுரமாகின்றது.

# இரட்டைப் பிரசவம்

அன்று எட்டயபுரத்தில்
இரட்டைப் பிரசவம்
நீயும், புதிய தமிழும்

உன் முதல் அழுகையில்
உன சகோதரி சிரித்தாள்

இரும்பு பெட்டிகளில் கிடந்த
இலக்கியத்தை
ஏழைகளுக்குப்
பரிமாறியவன் நீ!

குருட்டு எழுது கோல்கள்
இருட்டைத் கொட்டு
எழுதிக் கொண்டிருந்த போது
உன்னிடம் தான்
சூரியமைக் கூடு இருந்தது.

எழுத்தாணிகளால்
சிலுவையல றயபபட்ட
கவிதைகளுககு
நீ தான
மறுவுயிர்ப் பளித்தாய்.

உன் பேனா கிரீடம்
கழற்றிய போதெல்லாம்
ஆங்கிலேயன கிரீடம்
ஆட்டம் கண்டது.

கவிதைப் பெண்ணின் கையில்
அலங்கரிக்கும் அணிகளையல்ல,
ஆயுதங்களைத் தந்தவன் நீ!

அன்று நீ அறுத்தது
உன் பூநூலை அல்ல
வருணா சிரமத்தின் தாலியை

உன் கவிதையை விட
அழகான கவிதை
உன் வாழ்க்கை

உன் கவிதை
உன் வாழ்க்கையின்
வார்த்தை நிழல்கள்!

நாங்கள் தடுமாறும் போது
ஊன்று கோலாய்...
அடைக் கலப் புறாக்களுக்கு
சிபியின் துலாக்கோலாய்...
எங்கள் இரும்பை
பொன்னாக்குவதில்
மந்திரக் கோலாய்...

உன் எழுது கோலுக்குத் தான்
எத்தனை அவதாரங்கள் ......!

இக்கிராமங்களும் கல்வியில் முன்னேற்றமடைய வேண்டும் இதற்கு பொறுப்புணர்வுள்ள ஆசிரியர்களின் சேவைமிகவும் அவசியமாகிறது.

இப்படியான கிராமங்களில் பாடநூல்களை கற்பித்து விட்டு வருவதில் மட்டும் ஆசிரியரின் கடமை முடிவடைந்துவிடுவதில்லை.

கிராமப்புற மாணவர்கள் எல்லா விடயங்களிலும்தமது ஆசிரியர்களை பின்பற்றும் மனோபாவம் உடையவர்கள்.

பாடங்களை கிரகிப்பவர்களாக மட்டுமல்லாது பழக்க வழக்கங்களையும் ஆசிரியரிடமே கற்றுக் கொள்கின்றனர்

அந்த மாணவர்களிடம் பண்பாடு, ஒழுக்கம் நாட்டுப் பற்று என்பனவற்றையும் ஆசிரியர்கள்தாம் வளர்த்தாக வேண்டும்.

அத்துடன் அதற்கு முன்மாதிரியானவர்களாக நடந்து கொள்ளவேண்டியதும் பொறுப்புமிக்க ஆசிரியர்களின் கடமை என்பதை குறிப்பிடவேண்டிய அவசியமில்லை.

கிராமங்களே ஒரு நாட்டின் இதயம்.

கிராமங்கள் முன்னேற்றமடைய அங்கு கற்போர் தொகை அதிகரிககவேண்டும்.

ஆசிரியர்கள் இச்சந்தர்ப்பத்தில் கைதேர்ந்த சிற்பிகளாக கடமை புரிய வேணடியுள்ளது.

சிலைகளை செதுக்கும் சிற்பிகளாக அல்ல சிற்பிகளை உருவாக்கும் சிற்பிகளாக!

விளையாட்டு

# 'டென்னிஸ்'

பண்டைக் காலத்தில் கிரேக்கர்களும், ரோமானியர்களும் ஆடிவந்த தனிரகமான பந்தாட்டம் 1050ல் "ஜ்யூதேபௌமா" என்ற பெயரில் பிரான்ஸிற்கு வந்தது. இதனை இன்றைய 'வான் டென்னிஸ்' ஆட்டத்தின் முன்னோடி எனலாம். ஏதேன்ஸ் என்ற பிரெஞ்சு மூலத்திலிருந்துதான் 'டென்னிஸ்' என்ற சொல் பிறந்தது. 13ம் நூற்றாண்டின் கடைசியில் 'லாபுதே' என்று வழங்கிய இந்த ஆட்டம் 14ம் நூற்றாண்டில் பிரான்ஸ் முழுவதும் ஆடப்பட்டது. 1400ல் தான் இதற்கு டென்னிஸ் என்ற பெயர் வந்தது. உலகின் முதல் டென்னிஸ் மைதானம் 1496ல் பாரிசு நகரில் அமைக்கப்பட்டது. இந்த ஆட்டம் மெல்ல மெல்ல உலகெங்கும் பரவியது. எனினும் இது பணத்தை அதிகமாக விழுங்கும் விளையாட்டு. வசதி படைத்தவர்களால்தான் விளையாடமுடியும்.

ஒருவகை தடித்த கம்பளித் துணியால் (ஃபிளானல்) மூடப்பட்ட ரப்பர் பந்து. டென்னிஸ் மைதானத்தின் நடுவில் 3 அடிஉயரமான வலை. பட்டு அல்லது நைலோன் நூலினால் பின்னப்பட்ட துடுப்புகள் [ராக்கெட்டுகள்] இவ்வளவும் இருந்தால் டென்னிஸ் ஆடலாம். வலைக்கு இருபுறமும் ஒவ்வோர் ஆட்டக்காரர் இருந்து விளையாடும் ஆட்டத்தை ஒன்றை (சிங்கில்ஸ்) டென்னிஸ் என்பார்கள். இரண்டு பேர் நின்று ஆடுவது இரட்டை [டபிள்ஸ்] எனப்படும். டென்னிஸ் இருபாலாருக்கும் பொதுவானது.

இன்று உலகெங்கும் நடைபெறும் டென்னிஸ் போட்டிகளில் [ருனமென்டுகள்] முக்கியமானவை ஆடவருக்கான 'டேவிஸ்கிண்ணம்' போட்டியும் மகளிருக்கான 'வைட்மேன் கிண்ணம்' போட்டியுமாகும். டேவிஸ் போட்டி

## சில வரலாற்றுக் குறிப்புகள்

சர்வதேச அடிப்படையிலானது. வைட்மேன் போட்டியில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆட்டக்காரர்கள் மட்டுமே முன்னர் கலந்து கொள்ளலாம். இங்கிலாந்தில் நடக்கும் 'விம்பில்டன்' போட்டியும் பிரசித்தமானது.

இன்று உலகெங்கும் 3000 க்கும் அதிகமான டென்னிஸ் ஆட்டக் காரர்கள் இருக்கிறார்கள் சர்வதேச அடிப்படையிலே விளையாட 32 க்கும் அதிகமான டென்னிஸ் மைதானங்கள் உள்ளன. 1979 ல் பிரான்சு நாட்டில் அழகானதோர் டென்னிஸ் மைதானம் அமைக்கப் பட்டது. பிரெஞ்சுக்காரரான கிளார்ஜ் (Clerge) என்பவர்தான் உலகிலேயே முதல் டென்னிஸ் முதற்தரத்தினனாகும். (சம்பியன்) பிரிட்டனைச் சேர்ந்த ப்யோர்ன் போர்க் [Biorn Borg] தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு உலக முதற் தரத்தினனாக [செம்பியன்] இருந்தார்.

ந. துவாரநாதன்
உருத்திரபுரம்.

வாசகர்களுக்கு !

...'சாளர'த்திற்கு தினமும் மாணவ வாசகர்களிடமிருந்து ஏராளமான கடிதங்கள் வந்து சேருகின்றன. போட்டிகளுக்குரிய விடைகள், கவிதைகள் மற்றும் சிறு ஆக்கங்களும் எழுதியனுப்பப்படுகின்றன. மாணவர்கள் 'சாளர'த்துடன் இவ்வாறான முறைகளில் தொடர்புகளை வளர்த்துக் கொள்வதையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்கிறோம்.

கடிதங்களை அனுப்பும் போது பலர் தங்களது முகவரிகளை எழுத மறந்து விடுகின்றனர் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம். கடிதங்களையோ, ஆக்கங்களையோ அனுப்பும்போது அனுப்புபவரின் முகவரியினையும் ஓர் மூலையில் கட்டாயம் குறிப்பிட்டு அனுப்புதல் அவசியம் அதே நேரம் தெளிவாகவும் ஒரு தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட வேண்டியதும் வரவேற்கத்தக்கதாகும்.

# வெல்லப்பட முடியாதவன்

யூதர் பிரச்சனையை வைத்து எழுதப்பட்ட 'எக்ஸோடஸ்' எனும் நாவலில் ஹரி - பென்- ஹனான் எனும் ஒரு பாத்திரம். இவன் திருமணமாகி தன் மனைவியை போராட்டத்தின்போது பறிகொடுத்தவன் கடினசித்தம் மிக்கவன். கடமையே கண்ணானவன். கண்ணியம் தவறாதவன். ஓய்வு ஒழிச்சல் அற்ற உழைப்பாளி. 2ம் உலக யுத்த சூழலில் ஐரோப்பாவில் ஹிட்லரின் இன ஒழிப்பினால் துன்பப்படும் யூதர்களை இஸ்ரவேலில் குடியேற்றுவது இவனின் பிரதான பணி.

கிற்றி என்கின்ற ஓர் அமெரிக்கப் பெண் இரண்டாம் உலகப் போரில் போராளியான தன் கணவனை இழந்தவள். கணவன் மீது தீராத காதல் கொண்ட இவள் கணவனின் இழப்பைத் தொடர்ந்து பைத்தியக்காரி போல ஆனாள் இவள் ஒரு பேரழகி. அழகுக்காக இவளை யாசிக்காதவர்களே இல்லை எனலாம். தன் கணவனின் இழப்பின் பின்னர் எந்த ஒரு ஆணையும் நினைத்துப் பாராதவள். ஆனால். அழகின் நிமித்தம் சில தடவைகள் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப் பட்டாள். மனமுடைந்திருந்த இவள் மன அமைதிக்காக ஒரு யூத அகதி முகாமில் தாதியாகப் பணிபுரியத் தொடங்கினாள்.

அகதி முகாமில் உள்ள ஒரு சிறுமியால் இவள் கவரப்பட்டாள். பெற்றோரை இழந்திருந்த சிறுமியின் அழகிய குரல் வளமும் பாட்டும் இவளைப் பெரிதும் கவர்ந்தது. சிறுமியை முகாமிலிருந்து பிரித்து தன்னுடன் வைத்திருக்க விரும்பினாள். அதற்கான அனுமதியை ஹரி பென் ஹனானிடம் பெற வேண்டியிருந்தது. ஆனால் அவனோ அதனை மறுத்தான். தன் அழகில் மயங்கி அவன் இசைந்து விடுவான் என அவள் தப்புக் கணக்குப் போட்டாள். அவனோ இவளை அசட்டை செய்தான். தன் அழகுக்கு மயங்காத இந்த ஆணைக் கண்டு அவள் வியப்புற்றாள் ஆயினும் தன் நம்பிக்கையை தளர விடவில்லை. இறுதியாகச் சிறுமியை ஏற்றிய கப்பலில் தானும் ஏறி இஸ்ரேலை சென்றடைந்தாள்.

இஸ்ரேலை அடைந்த அன்றிரவு ஹரி பென் ஹனானை வென்றெடுக்க முடியும்என்ற நம்பிக்கையுடன் அவனுடன் சேர்ந்து செயற்பட்டாள். அவன் தங்கிய விடுதியில் இவளும் தங்கினாள் இருவரும் தனிமையாக ஒரே இடத்தில் தங்கினர். அவ்விரவை சாதகமாகப் பயன்படுத்தலாம் என்று முடிவெடுத்து தன் விருப்பை வெளிப்படையாகவே தெரிவித்து அவனை நெருங்கினாள். ஆனால் ஹரி பென் ஹனானே விலகி மறுபக்கம் திரும்பினான்.

வியப்புற்ற அவள் அவனிடம் விளக்கம் கேட்டபோது அவன் "எனக்கொரு கடமையுண்டு; நான் ஒரு யூதன்; நான் ஒரு போராளி; எனக்கென்றொரு இலட்சியம் உண்டு; எந்த அபிலாசையும் என் கடமைக்கு கீழ்பட்டவை" என்று கூறிபவன் தான் பறிகொடுத்த தன் மனைவியைப் பற்றிய சோகத்தை சொல்லத் தொடங்கினான். கிற்றியும் அவன் கொள்கைக்கு அடிமையானாள்.

## குறள் வெள்ளம்



இவ்வுலகில் உள்ள எல்லோராலும் எல்லாக் காரியங்களையும், சாதிக்க முடிவதில்லை. எதையும் செய்யத் தக்க மன உறுதியோ, உடல் வலிமையோ, திறமையோ அனைவருக்கும் சரிவரஅமைதல் இல்லை.

சிலர் இக்காரியம் நம்மால் முடியாது என்று ஆரம்பத்திலேயே மனம் தளர்ந்து ஒதுங்கி விடுகிறார்கள். இவனா இதைச் செய்தான் என்று அனைவரையும் வியக்க வைப்பவர்களும் இருக்கிறார்கள்.

எனவே சற்றுச் சிந்தியுங்கள், உங்களைப்பற்றி நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள். ஆராயுங்கள், மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வர முயற்சியுங்கள். ஏதோ ஒருதுறையில் நிட்சயம் நீங்கள் பிரகாசிக்கலாம்.

இப்படி சாதாரணமானவர்களால் சாதிக்க முடியாத (செயற்கரிய) ஒன்றை நீங்கள் செய்தால் உலகம் உங்களை வியந்து நோக்கும் இதை விடுத்து அனைவரும் போலே உண்டோம், உறங்கினோம், வாழ்ந்தோம், மடிந்தோம், என்றால் அந்த வாழ்வில் எந்தப் பெருமையும், இருக்காது. உலகம் உங்களை ஒரு பெரியவனாக அடையாளம் கண்டுகொள்ளமாட்டாது.

*" செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார் "*

— 0026
( நீத்தார் பெருமை)

சாளரம்

கதவு 1 காற்றலை 5

# கல்விச் சீர்திருத்தம் சுதந்திரமாய் நடைபோட...

தமிழனுக் கென்றோர் நிகழ்கால வரலாறு இருக்கக் கூடாது என்பதே சிங்கள பேரினவாதத்தின் பேரவாவாக உள்ளது. இலங்கைத் தீவில் அவனின் கடந்த கால வரலாறு பற்றிய பல திரிபுகளை ஏற்படுத்தி, அதையே வரலாறு என்ற நூலாக சிறிலங்கா கல்வி அமைச்சு தமிழ் மாணவர்களுக்குக்கூட போதித்தும் வருகிறது.

தனது வரலாற்றை தானே எழுத துணிந்து எழுந்து விட்ட தமிழன் தனது கடந்த கால வரலாறு என்ன என்பதையும் தானே எழுதவேண்டும். இது மக்கள் அனைவரின் கடமையல்ல. மக்களின் சார்பில் புத்திஜீவிகளால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமையாகும். இன்றைய மாணவர்கள் ஒரு பகுதியினர் இன்றைய புத்திஜீவிகளாகவும் இருப்பது உண்மையே ஆனால் பொதுவாகச் சொல்லப்போனால் இன்றைய மாணவர்களே நாளைய புத்திஜீவிகளாகும். இந்த நாளைய புத்திஜீவிகள் தமது தேசத்தின் கடந்தகால வரலாறு பற்றிய நெறிப்படுத்தலை இன்றே பெற்றுக்கொள்ள வேண்டும்.

இது சம்பந்தமாக தமிழ் புத்திஜீவிகள் மத்தியில் மிகக்குறைந்தளவு விழிப்புணர்வே இருந்து வந்துள்ளது. ஆனாலும் தமிழ் புத்திஜீவிகள் அனைவரும் இவ்விதமாகத்தான் இருந்தார்கள் என்று கூறமுடியாது. இலங்கையின் கல்வித் திட்டத்தில் தமிழ்மொழி பற்றியும், தமிழனின் பண்பாடு பற்றியும், தமிழனின் வரலாறு பற்றியும் பல நல்ல விடயங்களை உள்ளடக்க அவர்கள் பற்பல முயற்சிகள் செய்தார்கள் அதனால் சிற்சில அடைவுகளும் எய்தப்பட்டன.

ஆனால் 1972 ன் பின்பிருந்து இன்றுவரையான காலப்பகுதிக்குள் இவ்வடைவுகள் அனைத்தும் தூக்கி எறியப்பட்டன. ஆறுமுகநாவலர், விபுலானந்தர், ஞானப்பிரகாசர், சு. நடேசஐயர் ஆகிய தமிழ் அறிஞர்களும் தொண்டர்களும் பற்றிய சில குறிப்புகள் மட்டுமே காணப்படுகின்றன. பௌத்த சிங்கள பேரின வாதத்தின் ஏகபோகம் நிலை நிறுத்தப்படுவதில் 1972 ன் பின் ஏற்பட்ட வெற்றிகளே இதற்கான காரணமாகும்.

சுமார் பத்து வருடத்துக்கு மேற்ப்பட்ட காலத்தின் பின் இன்று மீண்டும் தமிழனின் உண்மை வரலாற்றை மீளவும் கல்வித்திட்டத்தில் இடம் பெறவைக்கும் செயற்பாடு ஆரம்பமாகி விட்டது.

முன்பு சில புத்திஜீவிகள் கல்வித் திணைக்களத்திலும், அரசியலிலும் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி இதைச் செய்தார்கள். அதாவது மேலிருந்து செய்விக்கத் தூண்டினார்கள். ஆகவே அவர்களால் தமது கருத்தை முழுமையாக வைக்கவும் முடியவில்லை, அடைவுகள் பூரணத்துவம் பெற்றதாக அமையவும் இல்லை.

ஆனால் இன்றோ சிறிலங்கா கல்வித் திணைக்களத்தைப் பொறுத்தவரை தமிழனின் வரலாறு கீழிலிருந்து இடம்பெற வைக்கப்படுகின்றது. சிங்கள பேரினவாத புத்திஜீவிகளின் தலையீடின்றி இது சுதந்திரமாக நடைபெறுகிறது. ஆண்டு - 6 வரலாற்று நூல் வெளியீடும், தமிழ் மொழி பாடத்திட்டத்தை சீர் செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சியும், விபுலானந்தர் போட்டிப் பரீட்சைகளும் பொது அறிவுப்போட்டிப் பரீட்சைகளும், அந்நிய மொழிச் சொற்களை பயன் படுத்துவதை தவிர்க்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளும் இதற்கான சில உதாரணங்களாகும். இந் நிலை தொடர எமது வாழ்த்துக்கள்.

நாம் நினைத்ததை நாமே சுதந்திரமாகச் செய்யக் கூடிய நிலையை நாம் எவ்விதம் அடைந்தோம்? சுய- நிர்ணய உரிமையை நிலை நாட்டுவதற்கு அவசியமான அரசியலதிகாரத்தை பெற்றுக் கொள்வதில் நாம் வளர்ச்சி பெற்றிருப்பதே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

அரசியலதிகாரமே அனைத்துக்குமான அடிப்படை என்பதை புரிந்து கொண்டு முன்னேறுவோமாக.

## ஒவியவாக்கியம் பதில்

### மனிதம் மரணிக்கிறது

ஒரு எலும்புக்கூட்டிற்கு
தோற்சட்டை போடப்பட்டிருக்கிறது
இயற்கை மூடுதிரை மறைவில்
சதை ஏற்கனவே கரைந்து
உறிஞ்சப்பட்டு விட்டது
இதன சாரத்தில்
மனித உருக்கள் எங்கோ
உப்பிப் பெருதம்
மானுடம் மட்டும்
மெல்ல .. மெல்ல... மரணிக்கும்

-தேவகி ஐயம்பிள்ளை,
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

கடந்த இதழ் ஓவியவாக்கியப் போட்டியில் இக்கவிதை பரிசுக்குரியதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

# நுண்ணறிவுப் போட்டி 2க்கான பதில்கள்

1) ஒரு நாட்டின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்கும் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரதான அம்சம், அந்நாட்டின் தேசிய வருமானம் அந்நாட்டு மக்களிடையே பாரிய ஏற்றத்தாழ்வின்றி பகிர்ந்தளிக்கப்படுதலை அடிப்படையாகக் கொண்ட மொத்த தேசிய வருமான அதிகரிப்பேயாகும்.

2) கலைமாணவனுக்கும், அறிவியல் மாணவனுக்கும் இடையேயான வேறுபாடு; கலைமாணவனின் கல்வியில் மிகப் பெரும் பகுதி பரிசோதனைக் கூடத்துள் வைத்து பரிசோதித்துப் பார்க்க முடியாதவை, அறிவியல் மாணவனின் கல்வியில் பெரும்பகுதி பரிசோதனைக் கூடத்துள் வைத்துப் பரிசோதித்துப் பார்க்க கூடியவை.

3) ஒரு பள்ளிக்கூட அதிபர் சிறந்த ஓர் நிர்வாகியாகவும் சிறந்த ஓர் ஆசிரியனாகவும் இருக்க வேண்டும்.

4) ஒருவன் அறிஞன் என்பதற்கான எடுத்துக்காட்டு, சூழலுக்கு ஒப்ப தன்னை தகவமைத்துக் கொள்ளும் ஆற்றலாகும்.

குறிப்பு:- சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்வதென்பது வேறு விடயம். சூழலுக்கேற்ப தகவமைத்துக் கொள்ளல் என்பது வேறு விடயம். முன்னையது சந்தர்ப்பவாதம், பின்னையது புத்திசாதுரியம்.

5) தமிழர் போற்றிப் பேணவேண்டியது பாரம்பரிய பண்பாட்டிலும் மரபுவழி நாகரிகத்திலும் உள்ள சிறப்பான, பயன்தரும் அம்சங்களை மாத்திரமேயாகும்.

குறிப்பு:- ஆண் மேலாதிக்கம் சாதிப் பாகுபாடுகள், மதசார்பு அரசியல், அறிவியலுக்கு புறம்பான முறையில் அமைந்துள்ள இரத்த உறவுத் திருமணங்கள், புலவர்கள் இரந்துண்டு வாழும் நிலையில் இருத்தல் இவைகள் எல்லாம் தமிழரின் பாரம்பரிய பண்பாட்டிலும், மரபுவழி நாகரிகத்திலும் காணக்கிடைக்கும் தீய அம்சங்களாகும். பாரம்பரியம், மரபுவழி என்ற பெயரில் இவைகள் எல்லாவற்றையும் நாம் ஏற்றுக் கொள்வதா?

6) "தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம், தாயினிடம் நீ அன்பை வாங்கலாம்" என்ற இந்த கவிதை வரிகள் ஆண்மேலாதிக்கத்தை அழகாக வலியுறுத்துகிறது.

குறிப்பு:- ஆணிடம் அறிவு மட்டுந்தான் உண்டு அவனிடம் அன்பு செலுத்தும் தன்மையில்லை என்பதோ, பெண்ணிடம் அன்பு செலுத்தும் தன்மைதான் உண்டு அவளிடம் அறிவு இல்லை என்பதுவோ உடலியல் ரீதியிலும், சமூகவியல் ரீதியிலும் எந்த ஆதாரமும் இல்லாத வெற்றுரையாகும். அடுத்தது, அன்பு செலுத்தும் பண்புதான் அறிவுடமை. அன்பூற்று இல்லாதவன் அறிவுடமை உள்ளவனாக இருக்க முடியாது. அறிவு என்பது நூற்கல்வியல்ல. இன்று வானொலி, தொலைக்காட்சி நூல்கள் ஆகியன நூற்கல்வியை தருகின்றன. அவை தந்தைகள் ஆகிட முடியுமா? அல்லது அவை யாரின் கருத்துக்களைக் கொண்டு வருகின்றனவோ அவர்கள் தான் தந்தையா? அப்படியானால் நூலாசிரியர்களாக, கட்டுரையாளர்களாக, கவிஞர்களாக, ஆசிரியர்களாக, பேச்சாளர்களாக பெண்கள் இல்லையா? அறிவூட்டிய ஒளவையார் பெண் உருவில் உள்ள ஒரு ஆணா? அன்பு நெறி போதித்த வள்ளுவர் ஆண் உருவில் உள்ள ஒரு பெண்ணா?

7) இந்துக் கோவில்களில் வருடா வருடம் நடைபெறும் சூரன்போர் மிகப் பண்டைய வரலாற்றின் ஆரிய மேலாதிக்கத்தின் குறியீடேயாகும்.

குறிப்பு:- ஆரிய இலக்கியங்களும், ஆரிய சமூக ஒழுங்கு விதிகளும் இந்திய பூர்வீக குடிகளை கீழ்நிலையில் வைத்தே நோக்கின. அதுவும் எதிர்ப்புக் காட்டிய ஆதிக் குடிகளை பயங்கரம், கொடூரம், தீக்குணம் ஆகியவை மிகுந்த அரக்கர்களாகவே உருவகப் படுத்தின. ஒத்துப்போன ஆதிக்குடிகள் கீழ்ப் படிவுள்ள கீழ்நிலை மனிதர்களாகவே சித்தரிக்கப்பட்டார்கள். அதேபோல் இவ் ஆரிய இலக்கியங்கள் ஆதிக் குடிகளின் குலக் கடவுளர்களை ஆரிய மயப்படுத்தின. ஆரம்பகால உருத்திரன் சிவனாக்கப்பட்டான், தொல் குடிகளின் முருகன் ஆரியரால் தத்தெடுக்கப்பட்டான் எதிர்ப்புக் காட்டிய ஆதிக் குடிகளில் தென் இந்திய ஆதிக் குடிகள் பிரதான பங்கை வகித்தன. இதில் திராவிடர் மிக முக்கியமானவர்.

8) இன்று தமிழீழ மண்ணில் ஆண்களின் எண்ணிக்கை பெண்களினதையும் விட குறைந்து செல்கிறது. இப் பிரச்சனைக்கான சமூகத் தீர்வு முதலில் ஆண் பெண் சமத்துவமும் பொருளாதார சமத்துவமும் மிக்க சுதந்திரமான தமிழீழம் நிறுவப்பட வேண்டும் தேசிய பொருளாதார வளர்ச்சி விகிதத்திற்கும், குடிசனப் பெருக்க விகிதத்திற்கும் இடையே பேணப்பட வேண்டிய சமநிலை எவ்விதமாக அமைய வேண்டும் என்பதையும் கணக்கில் கொண்டே இதற்கான சமூகத் தீர்வை வகுத்துக் கொள்ள முடியும். இது காலத்துக்குக் காலம் வேறுபடலாம்.

குறிப்பு:- இவ் விவகாரம் ஒரு பல்துறைத் தொடர்புப் பிரச்சனையாகஉள்ளதால் "ஆண்: பெண் = 100 : 00 சாத்தியமா?" என்ற கட்டுரை இதே இதழில் தனியாகத் தரப்பட்டுள்ளது.

9) சிவபெருமான் தன் உடலில் பாதியாக உமாதேவியாரை வைத்திருக்கிறார், என இந்துமதம் கூறுவது மனைவி கணவனின் ஒரு பாதி என்ற ஆண்மேலாதிக்க வாதத்திற்கு உருவம் கொடுக்க.

10) படிப்பை இடையில் குழப்பிக் கொண்டு பள்ளிக்கூடத்தை விட்டு விலகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. இன்றைய கல்வி அமைப்பே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

# நுண்ணறிவுப் போட்டி - 3

**கதவு - 1 காற்றலை - 5**

1) தியாகி என்பவன் தான் செய்யப் போகும் கருமத்தின் (அவசியத்தை உணர்வு பூர்வமாக புரிந்திருக்க வேண்டும் / அவசியத்தை புரிந்தும் இருக்கலாம் புரியாமலும் இருக்கலாம் அது ஒன்றும் பிரச்சனையில்லை.)

2) சமூக விரோத செயல்கள் (செய்பவர்கள் அனைவரும் சமூக விரோதிகளே / செய்பவர்களில் மிகச்சிலரே சமூக விரோதிகளாகும்)

3) பாடசாலைப் பிள்ளைகள் சீருடை போடுவதன் உண்மையான நோக்கம் (இன்று மிகக் குறைந்த அளவிலேயே நிறைவேற்றப்படுகின்றது / இன்னமும் முழு அளவில் நிறைவேற்றப்படுகின்றது)

4) உண்டி சுருங்குதல் பெண்டிற் கழகு என்பது (மிக அவசியமானதொரு சமூக ஒழுங்கு / சமூக வளர்ச்சிக்கு பாதிப்பான ஒரு சமூக ஒழுங்கு)

5) தமிழ் மன்னர்கள் காலத்தை நோக்கும் போது கவிஞர்கள், அறிஞர்கள் ஆகியோர் மன்னர்களைச் சார்ந்தே வாழ்ந்தனர். மன்னர்களின் விருப்பு வெறுப்புக் கொப்பவே அவர்கள் செயற்பட்டனர். மன்னன் ஏற்றுக் கொள்ளாத அறிஞர்கள் வறுமையில் வாடினார்கள். புறக்கணிக்கப்பட்டார்கள். சிலவேளைகளில் மரணத்தையும் தழுவிக்கொண்டார்கள். றோம, கிரேக்க சாம்ராஜ்யங்களிலும் இதே நிலைதான் நிலவியது. அறிஞர் சோக்கிரடிஸின்மரணம் இதற்கோர் எடுத்துக் காட்டு ஐரோப்பிய மன்னரவையில் கிறிஸ்தவ திருச்சபைகளே அறிவின் முகவர்களாக இருந்தார்கள். கலிலியோவை கொன்றது அவர்கள்தான். இதிலிருந்து நாம் வரவேண்டிய முடிவு, வரப் போகும் சமுதாயத்தில் (ஆளுவோர்கள் அறிஞர்களை கட்டுப்படுத்துவது அவசியம். ஆனால் ஆளுவோர்கள் புத்திசாலிகளாக அறிவுத்தேடல் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பது / இருவருக்கும் இடையேயான உறவு சினேக பூர்வமானதாக திறனாய்வு, தற்திறனாய்வு பண்பாடுடையதாக இருக்கவேண்டும் என்பது.)

6) சைவம், கிறிஸ்தவம். இஸ்லாம், பௌத்தம் ஆகிய மும் மதங்களையும் நோக்கும் போது கிறிஸ்தவமே மிக நுட்பமான முறையில் நிறுவனமயப் படுத்தப்பட்டுள்ளது. அதற்கடுத்து இஸ்லாம் மூன்றாவது பௌத்தம். மதத்தின் பலத்திற்கும் நிறுவனமயமாதலுக்கும் நிறைய தொடர்புண்டு. நிறுவனமயமாதல் மூலம் (மதம் பலப்படுகின்றது / மதம்பலவீனப் படுகின்றது)

7) தமிழீழ நிலைமையில் போர்க்கால முற்றுகை, நெருக்கடிகளின் மத்தியில் உருவாக்கப்படும் பொருளாதாரம் (தேசிய பொருளாதாரத்தின் முன்னோடி / தேசிய பொருளாதாரத்தில் இருந்து இது முற்றிலும் வேறுபட்டது.)

8) ஹரிச்சந்திரன் கதை (ஆதி கால அநாகரீக சமூக பழக்கவழக்கங்களின் துர் நாற்றத்தை அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கும் ஒரு அழகிய சதைப்பிண்டம் / ஒரு நீதிக் கதை)

9) இன்று பாடசாலை நூல்களில் கலப்புப் பொருளாதாரம் என்ற பெயரில் கற்பிக்கப்படுவது (ஒரு வகைத் தனி விசேட பொருளாதாரம் / யதார்த்தத்தில் காணக் கிடைக்காத ஒரு பொய்ப்பிரச்சாரம்)

10). மொழி பெயர்க்கப் பட்ட ஆரிய நூல்களுக்கு எதிராக ஈ. வே. ரா. பெரியாரால் மேற் கொள்ளப்பட்ட இயக்கம் (தமிழ் வாணியின் செழுமையைப் பல வீனப்படுத்தியுள்ளது / தமிழ்வாணியின் மேனியில் ஒட்டியிருந்த எதிர் பொருட்களை Antibodies) அப் புறப்படுத்தியுள்ளது)

---

### பரிசுக்குரியோர் கவனத்திற்கு

'சாளரம்' இதழில் வெளியான போட்டிகளில் பரிசுக்குரியோராக தெரிவு செய்யப்பட்டோர் அவர்களுக்குரிய பரிசுகளை எமது அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

தபால் விநியோகம் பல பகுதிகளில் சீரின்மையால் இவற்றை தபாலில் அனுப்ப முடியாதுள்ளோம். ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்குமிடையில் எந்நேரமும் சாளரம் அலுவலகத்திற்கு வந்து பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தூர இடங்களில் வசிப்போர் அலுவலகம் வர முடியாவிடில் எவ்வாறு பரிசைப் பெற்றுக்கொள்வது என்பது குறித்து எம்முடன் கடித மூலம் தொடர்புகொள்ளலாம்.

# அரும்புகள்

## கருக்கப்படும் அரும்புகள்

கனிய வளங்கள்
காலடி மண்ணிலிருந்து
களையப்பட்டு
எங்கோ தொலை தூரமொன்றில்
திரண்டு பெருகும் மாமிச மலைகள்
கோதுமை மலைகளை
கடலினுள் அமிழ்த்தும்
பழ மரங்களும், பால் மாடுகளும்
மிஞ்சிய பெருக்கத்தால்
நொந்து மடியும்.
பூமியை மூடிய மானுட நேயப்
பூக்கள் வெடித்து உதிரும்.

—டயனா
வைரவர் கோயில் வீதி
நல்லூர்.

## சோகம்

விடியலை நோக்கும்
வீண் மீன்கள்
கவிதை பாடாத கருங்குயில்கள்
முட் புதர் அடர்ந்த மேடுகள்
அங்குமிங்குமாய் சோக கீதங்கள்
சிறு சிறு மழைத்துளிகள்
கனிய மறந்த காய்கள்
கானகம் காரிருளில் சோர்வாய்......
என்ன அவலம்
என்ன சோகம்
இரவில் நடந்தது என்ன?
கதிரவன் நாளை வருவானா?
இயற்கைக்குக் கூடவா
இத்தனை சோகங்கள்!

—சிவாணி சிறிஸ்கந்தராஜா
யாழ் இந்துமகளிர் கல்லூரி.

## தெறிப்பு

சாளரம் இதழ்களை தொடர்ச்சியாக வாசித்து வருகிறேன். சாளரம் இதழில் ஒரு இறுக்கமான கருத்துச் செறிவை உலவ விட்டது போல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அவசியத்தை உணர்த்துவதை காணக்கூடியதாக உள்ளது. காலத்தின் தேவைக்கேற்ற இதழ் சாளரம் என்பது வெளிப்படை உண்மையாகும்.

நா. நந்தகுமார்
ஸ்கந்தபுரம்

---

சாளரம் காலம் தப்பாமல் வெளிவருவது அதன் எதிர் காலத்திற்கு நல்லதொரு சகுனமென்று நம்புகின்றேன். இன்று சாளரம் யாரைத் திருப்திப்படுத்துவது என்றதொரு பிரச்சனைக்குள் சிக்கியிருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. சாளரம் பாடசாலை மாணவர்களிற்கு பெரும்பான்மையாகப் பிரயோசனப் படக் கூடியதாக வெளிவருவதே நலம்

— யோ. ஜெயகாந்தன்
அரசறிவியல் மாணவன்
யாழ். பல்கலைக்கழகம்.

செப்ரெம்பர் மாதம் வெளியான சாளரம் இதழின் அட்டைப்படம் வித்தியாசமாக இருந்தது. சுவாமி விபுலானந்தரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். படித்திருக்கிறேன். ஆனால், அவர் போர்க்கோலம் பூண்டதோற்றத்தை சாளரத்தில் பார்த்ததும் புதினமாக இருந்தது. அவர் போர்க்கோலம் பூணகாரணமாக இருந்த விடயத்தினை அடுத்த சாளரத்தில் விளக்குவீர்களா?

— செ. சிவகுமார்.
அரியாலை.

(திரு. விபுலானந்தர் அவர்கள் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது போராடுவதற்காக ஆயுதப்பயிற்சி பெற்றுப் போர்க்கோலம் பூண்டார். ஆனால் போரில் கலந்து கொள்ளவில்லை.)

---

'சாளரம்' என்னைப் போன்ற அநேக மாணவர்கள் வாசிக்கும் சஞ்சிகையாக வளர்ந்து விட்டது. அதன் விலையைக் குறைத்தால் இன்னும் அதிகமானோர் பயன் பெறக் கூடியதாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

—பெ. நாகநாதன்
சில்லாலை.

# ஓவியம் இலக்கியம்



தமிழீழ எல்லை பகுதிகளில் ஆயுதமேந்திய குண்டர்களால் அன்றாடம் நடக்கும் நிகழ்வு இது!

இதற்குப் பொருத்தமான வரிகளை எழுதி உடனே அனுப்பி வையுங்கள்.